விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 13 செவ்வாய்க்கிழமை (27.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

# இவ்வருட இறுதிக்குள் அரசியல் கைதிகள் விடுதலை



## ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உரிய தீர்வு காணப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தம்மைச் சந்தித்த மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப்பிடம் உறுதிப்படத் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

23 ஆம் பக்கம் பார்க்க...

## நிறைவேற்று அதிகார முறைமை இரத்து

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி

24 ஆம் பக்கம் பார்க்க...

## மன்னாரில் கவனயீர்ப்பு



(மன்னார்)

பல ஆண்டுகளாக காணாமல் போயுள்ளவர்களை கண்டுபிடிக்க கூடுதல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மன்னாரில் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்று நடைபெற்றுள்ளது.

அதேபோல் விசாரணைகளின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்

24 ஆம் பக்கம் பார்க்க...

## புதைகுழி வழக்கு 16 க்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கு நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றில் மன்னார் மாவட்ட நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதிக்கு இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைகள்

24 ஆம் பக்கம் பார்க்க...

## பல ஏக்கர் காணிகள் இராணுவப் பயன்பாட்டில்

### பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில்

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்பட்ட இந்து ஆலய விக்கிரகங்கள், சிலைகள் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அங்கு இராணுவத்தினர் பல ஏக்கர் கணக்கில் வாழைத்தோட்டம், மரமுந்திரிகை பயிர்ச்செய்கையிலும், மாடு வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தை நேற்றைய தினம் நேரில் பார்வையிட்ட பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான குழுவினரே மேற்படி விடயங்களை அவதானித்துள்ளனர்.

இக்குழுவினரோடு ஊடகவியலாளர்களும் உள்ளே செல்ல அனுமதிக்கபட்டமையால் அழிவுக்குள்ளான பல இடங்களை காண முடிந்தது.

குறித்த பகுதிக்குள் ஒரு குடியே


24 ஆம் பக்கம் பார்க்க...

## திஸ்ஸவுக்கு எதிராக சி.ஐ.டி வழக்கு தாக்கல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன்வுக்கும் இடையில் நாட்டை பிரிவினைக்குட்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியது என பகிரங்கப்படுத்திய முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில்



ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மைத திரிபால சிறிசேனவுக்கும் இடையில கைச்சாத்திடப்பட்டதாக தெரிவித்து போலி ஆவணமொன்றை, திஸ்ஸ

24 ஆம் பக்கம் பார்க்க...

## 100 கிலோ தங்கம் மோசடி ஷிரந்திக்கும் தொடர்பு!

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் திறைசேரியில் இருந்த தங்கத்தை விற்பனை செய்ய முயற்சித்தமை தொடர்பில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவி ஷாமலி பெரேரா இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

திறைசேரியில் இருக்கும் 100 கிலோ கிராம் தங்கம் 50 ஆயிரம் லட்சம் ரூபாயுக்கும் மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட உள்ளதாக தனது கணவர் கொழும்பு வடக்கு பிராந்திய பிரதிப் பொலி

24 ஆம் பக்கம் பார்க்க...

## சி.சு.கட்சி தலைமையில் போட்டியிட சம்மதம்

### ஜனாதிபதி தெரிவிப்பு?

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தலைமை தாங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்மதம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே தனது சம்மதத்தை அவர் தெரிவித்தார் என உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருக்

23 ஆம் பக்கம் பார்க்க...

## இன்னும் மூன்றே மாதங்களில் மீண்டும் ராஜபக்ச யுகம்!

### பிரதி அமைச்சர் நிசாந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இன்னும் மூன்று மாதங்களில் மகிந்த ராஜபக்ச யுகம் ஒன்று மீண்டும் ஏற்படுத்தப்படும் என முன்னாள் பிரதியமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

பத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வந்துரம்ப பிரதேசத்தில் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார மேடை தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று பேரை பொலிஸ் நிலையத்தில் இருந்து பலவந்தமாக அழைத்துச் சென்றதாக முன்னாள் பிரதியமைச்சர் முத்துஹெட்டிகம மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இது சம்பந்தமாக அவருக்கு

24 ஆம் பக்கம் பார்க்க...

## உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரதியமைச்சர் விஜயகலா விஜயம்

### ஆலய வழிபாட்டிலும் ஈடுபட்டார்



(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டில் கடந்த 25 வருடங்களிற்கும் மேலாகவுள்ள பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் பெண்கள் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.

24 ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் பற்பல வேலைவாய்ப்புக்கள் (ஜேம்/டொபி/பிஸ்கட்/நுளம்புத்திரி/ பால்மா/ கிளவுஸ்) இலக்றீசன்/ மேசன், கை உதவியாளர்கள், சாரதிகள், வெல்டர் போன்ற இன்னும் பல வேலைகள் உங்களுக்காக எம்மிடம். சம்பளம் 18000/= - 40000/= (தொழில் அடிப்படையில்)18-50 ஆண்-பெண் (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே இடத்தில்) வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம். இன்றே தொடர்பு கொள்ளலாம். விரைந்து செயற்படுங்கள். மேலதிக தகவல்களுக்கு.

(சி-9932) **0771116770/ 0776838231**


## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவுப் பூகுதித் தலைவர் திருமதி இராஜகுமாரி வேணுகாந்தன் அவர்களது அன்பு மாமனார் **சின்னத்தம்பி பரமநாதன்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவன் பாதத்தில் இளைப்பாற வேண்டி நிற்கிறோம்.

**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்** (சி-9933)

# பெண்ணை மோதியவருக்கு விளக்கமறியல்

பெண்ணொருவரை மோட்டார் சைக்கிளினால் மோதி காயப்படுத்தினர் என குற்றம் சாட்டப்பட்ட நபரை எதிர்வரும் 30-ம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். கடந்த 23-ம் திகதி நெல்லியடி யாக்கரு பகுதியில் பெண்ணொருவரை மோட்டார் சைக்கிளினால் மோதி விட்டு தப்பி சென்ற குறித்த நபருடைய மோட்டார் சைக்கிள் நேற்று முன் தினம் சரசாலை தெற்கு சாவகச்சேரியில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

தப்பி சென்ற சந்தேக நபரை நேற்று குடத்தனை துன்னாலைப் பகுதியில் வைத்து கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதன் போதே நீதவான் இவ் உத்தர வைப்பிறப்பித்தார். (எ-60)


**வாழ்க்கையில் வெறுப்பா ?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**
(சி-9913)



## வீடு வாடகைக்கு உண்டு

புற்றளை சிலையடி மில் ஒழுங்கையில்

**0775819221**
(சி-9938)



## A.R. அக்கடமி

நல்லூர் பின் வீதியில் புதிதாக (01.02.2015) ஆரம்பிக்கப்படவுள்ள கல்விச்சாலையில் தரம் 05, 06,07,08,09 மாணவர்களுக்கான ஆங்கில பாட வகுப்புக்களுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**முற்பதிவுகளுக்கு அழையுங்கள்**
**0770556375, 0755719500**
(சி-9935)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்-2013

1.வணிக முதற் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்)
2.வணிக முதற் தேர்வு-2012 (பழைய பாடத்திட்டம்)
3.வணிக இரண்டாம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்)
4.வணிக மாணி பகுதி-I-2012 (பழைய பாடத்திட்டம்)
5.வணிக மூன்றாம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்)
6.வணிக மாணி-பகுதி-II-2012 (பழைய பாடத்திட்டம்)
7.வணிக நான்காம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்)
8.வணிக மாணி பகுதி-III-2012 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 23.02.2015 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| 1.வணிக முதற் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்) | 23.02.2015-03.03.2015 | 9.00-12.00 |
| 2.வணிக முதற் தேர்வு-2012 (பழைய பாடத்திட்டம்) | 23.02.2015-03.03.2015 | 9.00-12.00 |
| 3.வணிக இரண்டாம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்) | 06.03.2015-14.03.2015 | 9.00-12.00 |
| 4.வணிக மாணி பகுதி-I-2012 (பழைய பாடத்திட்டம்) | 06.03.2015-14.03.2015 | 9.00-12.00 |
| 5.வணிக மூன்றாம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்) | 16.03.2015-21.03.2015 | 9.00-12.00 |
| 6.வணிக மாணி-பகுதி-II-2012 (பழைய பாடத்திட்டம்) | 16.03.2015-21.03.2015 | 9.00-12.00 |
| 7.வணிக நான்காம் தேர்வு-2012 (புதிய பாடத்திட்டம்) | 23.03.2015-28.03.2015 | 9.00-12.00 |
| 8.வணிக மாணி பகுதி-III-2012 (பழைய பாடத்திட்டம்) | 23.03.2015-28.03.2015 | 9.00-12.00 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 18.02.2015 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.


பதிவாளர்
26.01.2015

(சி-9934)

## மரண அறிவித்தல்

# அமரர் நாகலிங்கம் கணேசபிள்ளை

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-யா/இணுவில் இந்துக் கல்லூரி)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட யா/இணுவில் இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் தலைவருமாகிய நா.கணேசபிள்ளை அவர்கள் 26.01.2015ஆம் திகதி காலமானார்.

அன்னார் வைகுந்தம் (பொன்மணி) ஓய்வுநிலை ஆசிரியர் (யா/இராமநாதன் கல்லூரி), (பொறுப்பாசிரியர் அறநெறிப் பாடசாலை இணுவில்) அவர்களின் அன்புக் கணவரும், சசிகுமாரனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதம செயலாளர்-இணைப்பு ஆளுநர் செயலகம், வட மாகாணம்) பாசமிகு தந்தையும், டிசியந்தியின் (பொறுப்பு வைத்திய அதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை தெல்லிப்பழை) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கம் அவர்களின் புத்திரனும், சிவகாமி சின்னையாவின் அன்புச் சகோதரனும், குணரட்ணம் இலங்கைநாயகி, காலஞ்சென்ற சோமசேகரி சிவலிங்கம், துரைராசா (லண்டன்), சிங்காரம் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற விசுவலிங்கம் சண்முகராசா, சறோஜினி, சிங்கராசா, ருக்மணிதேவி, மகேஸ்வரன், யசோதரா, சிதம்பரம், காலஞ்சென்ற இராமநாதன், கனகரத்தினம், சரஸ்வதி, காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2015) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சத்தியகிரி"
இணுவில் தெற்கு, இணுவில்
தொடர்பு:-021 225 5362

(9261)

தகவல்:மகன்-சசிகுமாரன்
மருமகள், மனைவி


## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு



| | சம்பளம் |
|---|---|
| **DHL உதவியாளர்** | 1500 RM + 0T SR - 65000 |
| Production Operator and Labour | 900 RM - 4000 SR (Accomodation no food + OT) |
| **5* ஹோட்டல்** | |
| சமையல் செய்பவர் | 2000 RM - SR 85000 |
| றூம் கிளீன் செய்பவர் | 1500 RM - SR 65000 |
| உதவியாளர் | 1500 RM - SR 65000 |
| **பில்டிங் கேன்ஸ் செக்சன்** | |
| மேசன் | 2800 RM - 110 000 SR |
| பிளம்பர் | 2000 RM - 85000 SR |
| வெல்டர் | 2000 RM - 85000 SR |
| காப்பெண்டர் | 2000 RM - 85000 SR |
| வயறிங் | 2000 RM - 85000 SR |
| Unit Company Labours | 900 RM + OT 45000 SR |
| Airport Cleaners | 900 RM + OT 45000 SR |
| Company Labours | 900 RM + OT 45000 SR |

(சி-9936)

கையடக்கத் தொலைபேசி **076 772 8640, 077 5560 846**
thineshjeyakumar 2012@gmail.com



## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்-2015

# பாடசாலைக்குரிய வெளியீடு

**ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின்**
**தரம்-5மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

- பாடசாலைக்குரிய முதலாவது பரீட்சை வினாத்தாள் வெளிவந்து விட்டது.
- தரம் -4, தரம்-3, தரம்-2 மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களும் வெளிவருகின்றன.
- பாடசாலைகளின் நன்மை கருதி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்த வினாத் தாள்களைப் பெற்றுப் பயனடையவும்.

**நேரடித் தொடர்புகளுக்கு**

**அன்பொளி கல்வியகம்**
இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அன்பொளி கல்வி நிலையம்**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி-9937)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்- முஸ்லிம் மக்களின் வாழ்விலும் மாற்றம் தேவை

## ஆட்சி மாற்றத்திற்கான உண்மையான அர்த்தம் அப்போதுதான் கிடைக்கும் என்கிறார் அமைச்சர் ராஜித

**சிங்கள பௌத்த உரிமைகளை பாதுகாத்து நாட்டை பாதுகாக்க விரும்பி மாற்றத்தினை மக்கள் ஏற்படுத்தியதைப்போல் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளை வென்று கொடுப்பதன் மூலமே தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு உண்மையான அர்த்தம் கிடைக்கும் என தெரிவித்த சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமானது மக்களை திருப்திப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.**

கால ம்ாற்றத்திற்கேற்ப இளைஞர்களின் சக்தியினூடாக **ஒரே கூரையின் கீழ் இணைவோம்** எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் இளைஞர் இயக்கத்தினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில்சிறப்பு விருந்தினராக கலந்து கொணடிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது அரசியல் வாழ்க்கையில் போராட்டங்களும் மாற்றத்திற்குமே அதிக நேரம் செலவழித்துள்ளேன். கடந்த காலங்களில் பல தலைவர்களுடன் செயற்பட்டிருக்கின்றேன். அதேபோல் இடைப்பட்ட காலங்களில் யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் கடந்து தற்போது மிகப் பெரிய மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளோம். இந்த மாற்றம் சரியாக அமைய வேண்டுமாயின தேசிய அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டம் சரியாக செயற்பட வேண்டும்.

அதேபோல் ஆட்சி மாற்றம் ஏற்படுவதனால் மக்கள் திருப்தியடையப்போவதில்லை. மக்களின் பசியை போக்கி அனைத்து மக்களும் சந்தோசமாக வாழக்கூடிய வகையில் ஆட்சியில் பொருளாதார மாற்றத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோல் இன, மத ஒற்றுமையினை பாதுகாத்து ஒன்றிணைந்த ஆட்சியினை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் சிங்கள பௌத்த உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானது. ஆனால் அதற்கு சமமான வகையில் தமிழ், முஸ்லிம் ,கிறிஸ்தவ மக்களின் உரிமைகளுக்கும் முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டிய தேவை உள்ளது. அத்தோடு நாட்டின் அபிவிருத்தி மேம்பட வேண்டும். நல்ல வர்த்தக பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இப்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தினை சரியான முறையில் செயற்றிறன் மிக்கதாக மாற்றிக் கொள்ள வேண்டும். அத்தோடு கட்சி அரசியல் முறைமையில் இருந்து விடுபட்டு மாறுபட்ட அரசியல் முறைமையொன்றினை உருவாக்க வேண்டும். சின்னம் வர்ணம் கொள்கையென தனித்து பயணித்து நாடடின் அபிவிருத்தியினை கட்டிக்காக்க முடியாது. எனவே இப்போது அனைவருக்கும் மிகச்சிறந்ததொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை மிகச்சரியாக பயன்படுத்தி மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் எந்தவொரு மாற்றத்திற்கும் அடிப்படை இளைஞர்களே. இளைஞர் சமூகம் ஒன்றிணைவதுதான் ஒரு நாட்டின் பிரதான மாற்றத்திற்கு அடிப்படையாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மரண அறிவித்தல்



## கனகசபை உருத்திரகுமாரன்

*அகில இலங்கை சமாதான நீதவான் (J.P), முதுகலைமாணி (M.A) , முன்னாள் ஆசிரியர்- நயினாதீவு மகா வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர்- கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர்- உரும்பிராய் இந்துக் கல்லூரி, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்- தீவக வலயம், முன்னாள் அறங்காவலர்-நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், இந்நாள் ஆசிரியர், யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம், தர்மகர்த்தாசபை உறுப்பினர்- அமுதசுரபி அன்னதான சபை, நயினாதீவு.*

நயினாதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை- உருத்திரகுமாரன் (22.01.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை- சரஸ்வதி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், சட்டத்தரணி, டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுபோதினியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர் (பிரான்ஸ்), அபிராமி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்ஜீவனின் (அமெரிக்கா) அன்பு மாமாவும், தியாகராசன் (லண்டன்), செம்மனச்செல்வி (ஆசிரியை- யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சிவனேசன் (சுவிஸ்), ஜீவமணி (டென்மார்க்), அலெக்ஸ்சாண்டர்பிளமின் (அப்பன்- ஜேர்மனி), சுரேந்திரன் (குஞ்சு- லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், உமாகரன், கலாதரன் ஆகியோரின் சகலனும், ரஞ்சினி, சத்தியா,மாலினி, சுஜாத்தா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2015) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"ஜோதிவாசா"**
**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**
**தொ.பே.இல. 077 218 6665, 021 790 0157**

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
**க. உருத்திரகுமாரன்**
B.A,M.A,Dip.Ed,J.P
(முன்னாள் தமிழ் உதவிக்கல்விப்பணிப்பாளர்- தீவ்க வலயம்)

தீவகத்தின் திருவிளக்காம் நயினைப்பகுதியில்
கனகசபை உருத்திரகுமாரன் கல்வியால் உயர்ந்தான்
நலம்மிக்க நற்றமிழின் நனிசிறந்த நல்லாசான்
வளம்மிக்க வண்டமிழ் சுவை நிறை பேச்சாளன்
மனங்கொண்ட சுபோதினியை மனையாளாய் அடைந்து
மக்கள் இருவரை செல்வங்களாய் பெற்றவர்
கற்றவர் பலரை கல்வியால் உயர்த்தி
கொக்குவில், உரும்பிராய் இந்துக் கல்லூரிகளில்
நீண்ட நெடுங் காலம் ஆசானாய் திகழ்ந்து
உற்ற நண்பனாய் உளம் நிறைந்தவர்
உம் பிரிவால் எங்கள் நெஞ்சங்கள் கனக்குதையா!
உம் ஆன்மா சாந்தியில் நிலை பெறட்டும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(இ)

**துயரினில் இணையும்**
**யா /உரும்பிராய் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரிய நண்பர்கள்**

# இராசி பலன்

27.01.2015
தை 13, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிவரை
அட்டமி பின்னிரவு 3.20 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 4.37 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை
சுப நேரம் 11.06-12.36 மணிவரை

வளவன்

**மேடம்:** கனவு பலிதமுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பணியில் மன உளைச்சல்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர்.

**இடபம்:** பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள் எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும்.

**கடகம்:** தொட்ட காரியங்கள் கைகூடும் நாள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம்மாறுவர், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்:** வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, பெற்றோர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிபுக்கு வரும்.

**மீனம்:** புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 133**

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

பாருங்கள்... செதுக்கும் பொழுது என்ன நிகழ்கிற தென்றால் நீங்கள் செதுக்க ஆரம்பித்து முடித்துவிட்டீர்கள் என்று நினைக்கும் தருவாயில் உங்கள் கற்பனை மாறி விடுகிறது. அது கொஞ்சம் வேறுமாதிரியாகிவிட்டதால் அந்த கொஞ்சம் மாறிய கற்பனையுடன் பொருந்த நீங்கள் இன்னும் கொஞ்சம் செதுக்க வேண்டியதிருக்கிறது! இது ஒரு முடிவற்ற சுழற்சியாகிவிடுகிறது!

உங்களிடம் மனக்கோட்டைகள் இருக்கும் வரை உறவு ஒருபோதும் நிகழ முடியாது. நீங்கள் 24 மணி நேரமும் வீட்டில் இருந்தாலும் ஒருவர் மற்றவரின் கண்களைப் பார்ப்பதில்லை. ஏனெனில், நீங்கள் நிஜத்தில் வாழாமல் கனவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் உண் மையிலேயே நிஜ மனிதனுடன் வாழவில்லை- மற்றவர் செய்யும் எல்லாவற்றையும் உங்கள் கற்பனை வழியாகவே பார்த்து உங்கள் 'வாழ்க்கை, கடவுள் உங்களுக்களித்த தண்டனை என்ற தீர்மானத்திற்கு வந்து விடுகிறீர்கள்.

நீங்கள் திருமணமாகாதவராயிருந்தால் உங்கள் கனவுகளை விட்டு விடுங்கள்; உங்கள் இரத்தம் குளிர்ச்சியடையும்; ஹார்மோனின் தொந்தரவிற்களாக மாட்டீர்கள். நீங்கள் மனைவியை இழந்தவராயிருந்தால், உங்கள் கற்பனையை விட்டுவிடுங்கள்; தனிமையினால் வேதனையடைய மாட்டீர்கள்.

உங்களால் முடிந்த வரையில் குழந்தைகள் தொலைக் காட்சியில் டூயட் காட்சிகளைக் காண அனுமதிக்காதீர்கள். அவர்கள் வெறுமனே இசையை ரசித்து அதனுடன் நடனம் ஆடினார்களேயானால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் பார்க்கும் டூயட்டுகள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் உள்ளே எடுத்துக் கொள்கிறார்கள். இங்குதான் பிரச்சினை ஆரம்பமாகிறது.


'Creative Visualization'

அனைத்தும் பால் உணர்வு சக்கரமான மூலாதார சக்கரத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. பிறகு வெறும் ஒரு குறிப்பே போதுமானது. மூலாதாரம் தயாராகிவிடுகிறது.

எதிர்பார்ப்புகளின் சுமையே மூலாதாரத்தின் அமைதியைக் குலைத்து விடுகிறது. அதனால் இந்தச் சக்கரம் பூட்டப்படுகிறது. உங்கள் கனவுகளை இன்னொருவரின் மூலம் அல்லது தொலைக்காட்சியைப் பார்ப்பதன் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முயற்சி செய்தாலோ அல்லது உங்கள் எதிர்பார்ப்புகளையும் கனவுகளையும் இன்னொருவரின் மீது சுமத்தினாலோ அல்லது பிரதிபலித்தாலோ இந்தச் சக்கரம் பூட்டப்படுகிறது.

அதற்கும் வெளியுலக வாழ்க்கை நியதிகளுக்கும் சம்பந்தமில்லை. அதற்கும் பெயரளவிலான பிரம்மச்சரியத்திற்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. அதற்கும் நீங்கள் உங்களுக்குள் பிளவுபட்டிருப்பதற்கும் சம்பந்தம் உண்டு.

### பிரம்மச்சரியம் என்பது என்ன?

பிரம்மச்சரியம் என்பது நமக்குள் இருக்கும் அடக்கி வைக்கப்பட்ட பாதிக்காக ஏங்கிக் கொண்டிராமல் இருப்பது. நீங்கள் ஒரு ஆணாக இருந்தால் உங்களுக்குள் இருக்கும் பாதி அல்லது பெண்ணை நீங்கள் இழக்கிறீர்கள் என்ற எண்ணமே வராத அளவிற்கு ஒரு மனநிறைவை நீங்கள் உங்களுக்குள்ளேயே அனுபிக்க வேண்டும். நீங்கள் ஒரு பெண்ணா இருந்தால்; இந்த மனநிறைவை வெளியே தேடவேண்டிய தேவையின்றி நீங்களே உங்களுக்கு மிகவும் போதுமானவராக இருக்க வேண்டும்.

இந்நிலையை அடைந்து விட்டீர்களானால் நீங்கள் வெளியுலகத்தில் ஒரு பெண்ணுடனோ அல்லது இன்றியோ வாழ முடியும்.

இந்த அடையாவிடில் திருமணம் செய்து கொண்டால்கூட நீங்கள் தொடர்ந்து ஹார்மோன்களின் தொல்லைக்கு உட்பட்டுத்தான் இருப்பீர்கள். இந்த ஹார்மோன்களின் தொல்லை மனநிறைவுக்கான ஏக்கத்தைத் தவிர வேறல்ல. அது உண்மையில் உங்களுக்குள்ளிருந்து அடைய வேண்டியதாகும்; வெளியிலிருந்து அல்ல.

இந்த மனநிறைவை அடைந்துவிட்டால் நீங்கள் திருமணமானவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் மனதில் அமைதி நிலவும்.

(தொடரும்)


**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

## 30 நிமிடங்கள் ஓய்வெடுத்த இதயம் மீண்டும் துடித்தது

24 வாரங்களில் பிறந்த சிசுவொன்றின் இதய துடிப்பு நின்ற பின்னரும் அரை மணித்தியாலத்துக்கு அது உயிர் பிழைத்த அதிசய சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த ஃபாரஸ்டர் (வயது 25) எண்டனி (வயது 33) ஆகிய தம்பதிக்கு 24 வாரங்களில் சிசுவொன்று பிறந்துள்ளது. பிறக்கும் போது, சிசுவின் நிறை 650 கிராம் ஆகும்.



நுரையீரல் நோய், மூளையில் இரத்த கசிவு, இரத்த தொற்று நோய் மற்றும் காதில் சீல் வடிதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளும் குறித்த சிசு பிறந்துள்ளது.

இந்நிலையில் சிசுவுக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக சிசுவின் இதயத்துடிப்பு நின்றுள்ளது. செய்வதறியாத வைத்தியர்கள் சிசுவுக்கு 10 நிமிடங்கள் ஒட்சிசன் கொடுத்துள்ளனர்.

அரை மணித்தியாலத்துக்கு பின்னர் சிசுவின் இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பித்துள்ளது.

தற்போது சிசு ஆரோக்கியமாக இருப்பதாகவும் அதனை வீட்டுக்கு அழைத்து செல்லமுடியும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஓட்ஸ் சூப்



**தேவையானவை:**

ஓட்ஸ் - 1 கப்
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 1
பூண்டு - 1 பல்
மிளகு தூள் - 1/4ஸ்பூன்
பால் - 1 கப்
தண்ணீர் - 1 கப்
எண்ணெய் - 2 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:-**

வெங்காயம், பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பூண்டை தோல் உரித்து ஒன்றும் பாதியாக தட்டி வைக்கவும். முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயம், பச்சை மிளகாய் மற்றும் பூண்டு சேர்த்து, நன்கு பொன்னிறமாகும் வரை வதக்க வேண்டும். பின்பு ஓட்ஸ் சேர்த்து 2 நிமிடம் வதக்கி, தண்ணீர் மற்றும் உப்பு சேர்த்து, ஓட்ஸ் மென்மையாகும் வரை வேகவைக்க வேண்டும். ஓட்ஸானது மென்மையானதும், அதில் பால் மற்றும் மிளகு தூள் சேர்த்து நன்கு கொதிக்க விட வேண்டும். கலவையானது நன்கு கொதித்ததும், தீயை குறைவில் வைத்து, மீண்டும் 2 நிமிடம் கிளறி விட்டு வேக வைத்து, இறக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 100 நாட்கள் திட்டத்தில் முன்னுரிமை

## நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

**புதிய அரசாங்கம் முன்னெடுத்துள்ள 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மறைமாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு யாழ். மறைமாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்வி.பி.மங்களராஜா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் மற்றும் காணாமற்போனோர் தொடர்பில் பொறுப்புக் கூறப்பட.வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படையினரிடம் சரணடைந்த பின்னர காணாமற்போயுள்ள அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் மற்றும் அருட்தந்தை ஜிம் பிரவுண் உள்ளிட்டவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் துரிதகதியில் விசாரணை செய்யப்பட வேண்டும்.

இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உள்ள இடம்பெயர்ந்த மக்களை உடனடியாக சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும்.

தாங்கள் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கையில் நீதியும் உண்மையும் நிறைந்த ஒரு நிலையான சமாதானத்தை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் அமோகமாக வாக்களித்துள்ள வடக்குக் கிழக்கு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் பெண்கள், நோயாளிகள், வயதானவர்கள் மற்றும் குடும்ப உழைப்பாளிகள் என பலதரப்பட்டவர்கள் இருப்பதாகவும், பெண்களில் சிலர் தமது பிள்ளைகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை வலிகாமம் வடக்கு, மன்னார் முள்ளிக்குளம், கிழக்கு மாகாணத்தில் மூதூர் போன்ற இடங்களில் வசித்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அங்கு படையினர் நிலைகொண்டிருப்பதாகவும், அதனால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் புதிய ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறப்படாத காரணத்தினால் இந்து மற்றும் கத்தோலிக்க மக்கள் தமது பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டிருப்பதாகவும், இப்பிரதேசத்தில் இருந்த 45 பாடசாலைகள் செயலிழந்திருப்பதனால் அந்த மக்களுடைய கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இக்கடிதம் ஊடாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன், மயிலிட்டி பிரதேசத்தில் மக்கள் தமது கடற்றொழிலை இழந்து சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றமை உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கம் தனது 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகாண முன்வர வேண்டும என்றும் யாழ். மறைமாவட்டத்தன் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு மேலும் கோரிக்கை விடுத்துள்ளது.(இ-5)

# கல்லுண்டாயில் கழிவுகளை கொட்டி எமது மக்களை அழித்துவிடாதீர்கள்

## மானிப்பாய் பிரதேசசபைத் தவிசாளர் கோரிக்கை

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் வாழும் பிரதேசம் காக்கைதீவு- கல்லுண்டாய் என்பதனை நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

எமது நிர்வாக எல்லைக்குள் யாழ். மாநகர சபையோ அல்லது ஏனைய வெளி, உள்ளூராட்சி சபைகளோ மனிதனுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் திண்மக் கழிவு, மலக்கழிவு, கால்நடை கழிவு, வெளிக்கழிவுகள் கல்லுண்டாயில் கொட்டுவதனை உடன் நிறுத்த வேண்டும்.

இந்த உடனடி நடைமுறையை இன்று 27 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதாக தவிசாளர் சி.சி.மகேந்திரன் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தவிசாளரது அறிவித்தலை மீறி வலி. தென்மேற்கு எல்லைக்குள் வாழும் மனிதனுக்கு ஆபத்தான திண்மக் கழிவு, மலக்கழிவுகளை கொட்ட முனைந்தால் நீதிமன்றத்தின் ஊடாக சட்டத்தின் முன் தவிசாளர் என்ற வகையில் நடவடிக்கையினை முன்னெடுப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது எமது நிர்வாக எல்லைக்குட்பட்ட காக்கைதீவு, கல்லுண்டாய், நவாலி, ஆனைக்கோட்டை பிரதேச மக்கள் மேற்படி ஆபத்தான திண்மக் கழிவுகளாலும் எரியூட்டப்படும் புகைமூட்டங்களாலும் நிலத்தடி நீர் தொற்று, மழை வெள்ளம் மூலம் காவுநோய்கள் போன்ற ஆபத்தான நோய்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

வலி.தென்மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் கீழான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கருத்தின்படி விரைவில் அப்பகுதி மக்களுக்கு வாய், குதவழி நோய், புற்றுநோய், சுவாச நோய் (ஆஸ்துமா), தோல் வியாதி என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதாக புள்ளிவிபர ரீதியாக தெரியப்படுத்தியுள்ளார்.

இதனைவிட கல்லுண்டாயில் இருந்து வெளிக்கிளம்பும் டெங்கு நுளம்பு, இலையான்கள் இலட்சக்கணக்கில் பெருகி அருகில் உள்ள நவாலி, ஆனைக்கோட்டை கல்லுண்டாய், காக்கைதீவு போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஆபத்தான நோய்கள் பரவ இந்த திண்ம மற்றும் மலக்கழிவுகள் காரணமாய் உள்ளன.

மேலும் யாழ். மாவட்டம் டெங்கு தொற்றில் இரண்டாம் நிலையில் உள்ளதாக அரசால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடல் நீரேரி மாசடைவதனால் இதனை நம்பி மீன்பிடித் தொழில், கடல் அட்டை பதனிடல், இறால் பதனிடல் போன்ற தொழில் புரிவோரின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே பிரதேச மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரின் அனுமதியின்றி அவ் எல்லைக்குள் வெளியிடத்து திண்மக்கழிவுகள் வாகனங்கள் மூலம் கொட்டப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விடயத்தை கடந்த 19.01.2015 இல் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற டெங்கு தொடர்பான கூட்டத்தில் பகிரங்கமாக வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் என்ற வகையில் அறிவித்துள்ளேன்.

எனவே மக்களை காப்பாற்றுவதற்காக கருவிலிருந்து கல்லறை வரை சேவை செய்யும் உள்ளூராட்சி சபை மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தவிசாளரின் அனுமதி இன்றி கல்லுண்டாயில் உள் நுழையக் கூடாது என்றும் பொருத்தமான தொழில்நுட்பம், தொழில் நுணுக்க பொறிமுறை இன்றியும் தவிசாளரின் அனுமதி இன்றியும் கல்லுண்டாயில் ஆபத்தான கழிவுகளைக் கொட்டக் கூடாது என்றும் அறிவித்துள்ளார்.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 65 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் (லண்டன் NOT PR)<br>தொ.இ: B/4042 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 9 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4084 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம் பூரட்டாதி<br>கி.பா: 41 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4043 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 41 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>தொ.இ: G/4085 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 3 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/4044 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 36 3/4 உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: BFA<br>தொ.இ: G/4087 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 20 3/4 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/4045 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 19 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC, MSC (லண்டன்)<br>தொ.இ: G/4089 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திர வியல் கல்லூரியானது தொழிற்கற்கைநெறி களுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண் ணப்பிக்க முடியும் .

இக் கற்றைநெறிகளாவன, மீன்பிடி தொழில்நுட்பம், கடலக வரைபடம் வாசித்த லும் செய்மதி தொடர்பாடலும்(GPS), வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக ஓட்டுநர் பயிற்சிநெறி, உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி, சுழியோடிப் பயிற்சிநெறி, கடலக மாலுமி பயிற்சி நெறி, கரையோர வளங்களின் முகாமைத்துவம், மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம், படகு உற் பத்தி செய்தலும் திருத்துதலும், கடல் இயந் திரவி யல் தொழில்நுட்பம்.

இக்கற்கைநெறிகளை கற்கவிரும்புவ ர்கள் தங்கள் சுயவிபரங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். உரிய விண்ணப்பங்களைப் பெற விரும் புபவர்கள் அலுவலக நாட்களில் நேரடியாக தொடர்புகொள்ள முடியும் என யாழ்.கடற் றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் கு.ஆனந்த குமாரன் அறிவித்துள்ளார். (இ




# தமிழர் உரிமைகளைப்பெறும் நாள் விரைவில் உதயமாகும்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நம்பிக்கை

(கரணவாய்)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று தமிழ் மக்க ளுக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நாள் உதயமாகும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் இணைந்து நடத்திய சமகால அரசியல் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



வடமராட்சி தெற்கு மேற்கு பிர தேச சபை மண்டபத்தில் கடந்த சனிக் கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் சார்பாக எந்தவொரு நகலையும் ஐக்கிய நாடுகள் சபை யில் சமர்ப்பிக்கவில்லை.

நாம் சத்தியக் கடதாசி மூலமாக தமிழ் மக்களின் உரிமைகளை வென் றெடுக்க கூடியதாக சமர்ப்பித்துள் ளோம் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆ.ஆனந்த ராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந் திரன் மற்றும் சட்டத்தரணி மணி வண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-60)

## நூல் வெளியீடு

யாழ். 'அவை' இன் ஏற்பாட்டில் பார்க்கப்படாத பக்கங்கள் என்ற தெணியானின் கட்டுரைகள் அட ங்கிய நூல் வெளியீட்டு விழா அல் வாய் கலை அகத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணி க்கு பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் வரவேற்புரையை ஆசிரியர் திருமதி தேவகி ரமேஸ் வரன் மற்றும் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் ஆற்றவுள் ளனர். (இ

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணைமிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவி லின் மஹாகும்பாபிஷேகதினவருஷா பிஷேக விழா இன்று செவ்வாய்க்கி ழமை காலை 7 மணிக்கு பூஜையு டன் ஆரம்பமாகும். அதனைத் தொட ர்ந்து 11.30 மணிக்கு 1008 சங்காபி ஷேகம் இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் திருவூஞ்சலும் சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (இ

# ஹவாய் ஆதீனமுதல்வர் நாளை யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் உள்ள ஹவாய் ஆதீன முதல்வர் சற்குருபோதிநாத வேலன் சுவாமிகள் ஆன்மீக யாத் திரை மேற்கொண்டு நாளை புதன் கிழமை மாலை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் அவர் ஐந்து நாட்கள் வரை யாழ்.ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் தங்கி யிருந்து ஆன்மீக நிகழ்வுகளில் பங்கு கொள்ளவுள்ளார்.

மேலும் நாளை மறுதினம் வியா ழக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்ய வுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலை க்கும் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாண மண்ணுக்கு வருகை தரும் சுவாமிகளை அடியவர்கள் தரிசித்து ஆசிபெறுவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ




## நிர்வாகக்கூட்டம்

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபை நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற் றுக் கிழமை பி.ப.2.30 மணிக்கு சபைத் தலைவர் நாகன் கிருஷ்ண பிள்ளை தலைமையில் கோண்டா விலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனை த்து நிர்வாக சபை உறுப்பினர்க ளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ

# சாவகச்சேரி நகராட்சிமன்ற உள்ளூராட்சிவார நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன் விழா ஆண்டின் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசியவாசிப்புமாத நிறைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமை யில் நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிவாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை முன்னி ட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டி களில் வெற்றிபெற்ற மாணவர்க ளுக்கான பரிசில்களும் சான்றிதழ் களும் வழங்கி கௌரவிக்கப்படவு ள்ளதுடன் பொன்விழா ஆண்டு உள்ளூராட்சிவார சிறப்புமலர் 2014 வெளியிடும் நிகழ்வும், மாணவர்க ளது கலைநிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொள் ளவுள்ளார் என சாவகச்சேரி நக ராட்சி மன்றம் அறிவித்துள்ளது. இந்நிகழ்வில் பொது மக்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கல ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது. (இ-29)



இந்தியாவின் குடியரசுதினம் நேற்றுக்காலை யாழ்.இந்திய துணைத்தூதரகத்தில் இடம்பெற்றது... (படங்கள்:உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கினால் 3199பேர் இதுவரை பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மூன்றாயிரத்து 199 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு நோய் அதிகமாக பரவியுள்ளது. கொழும்பில் 870 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 447 பேரும், கம்பஹாவில் 285 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 177 பேரும், குருநாகலில் 159 பேரும் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 150 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

அறிவு, திறன் மனப்பாங்கு விருத்தியுடன்

# மாணவர்களுக்கு மகிழ்ச்சியான சூழலை உருவாக்க வேண்டும்

பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகளின் அறிவு, திறன் மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்வதுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் செல்வி. வே.சிவலோஜினி தெரிவித்தார்.


யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை அண்மையில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற தரம் 1 மாண வர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

ஆரம்பக் கல்வி மாணவர்களின் உரிய கல்வித் தரங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்து இடை நிலைக் கல்விக்கு வழிப்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பா கும். மாணவர்களின் பன்முகத் தன்மையைமதித்து அவர்களின் ஆளுமை விருத்திக்கு வேண்டிய அடித்தளத்தை ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் சுகாதாரம், போசாக்கு, பாதுகாப்பு, கவனிப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதுடன் வகுப்பாசிரியர்களுடன் நல்ல இடைவினை உறவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் மூலமே பிள்ளைகளின் நிலையை அறிந்து வேண்டிய ஆலோசனைகளைப் பெற முடியும். பிள் ளைகளின் சிறப்பான அடிப்படைத் தேவைகள் நிறைவடையும் வகையில் பொருத்தமான சூழலை உருவாக்க வேண்டும். சகல பிள்ளைகளையும் கல்வியில் உட்படுத்தி சமமான வாய்ப்புக்களை வழங்குவதாக பாடசாலையின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பேசும் படம் - 09



ஆலடிச்சந்தி ஓட்டுமடத்தில்...

அன்று யாழ்ப்பாணம் வரவேற்கிறது இன்று ஐ வரவேற்கிறது...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

# வடக்கு - கிழக்கில் நிலவுவது பொருளாதார பிரச்சினையே

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை, அதிலுள்ள பாதகமான அம்சங்கள் களையப்பட்ட நிலையில் தொடர்ந்தும் நீடிக்கும் என தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர், வடக்கு கிழக்கில் நிலவுவது பொருளாதார பிரச்சினை என தெரிவித்துள்ளார்.**

மக்கள் தற்போது சுதந்திரமாக இருக்கிறார்கள் என கருதுகிறேன். நாங்கள் மிகவும் கடினமான பணியை செய்தோம்.அந்த அரசாங்கத்தை வீழ்த்துவது என்பது நினைத்துப் பார்க்கவே முடியாததாக காணப்பட்டது. பொதுமக்களின் வரிப்பணத்தையும், பொதுச் சொத்துக்களையும் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துவது குறித்து அவர்கள் சிறிதளவும் கவலைப்படவில்லை.

400 பில்லியன் வரையில் தேர்தல் பிரசாரத்திற்காக அவர்கள் செலவு செய்திருப்பார்கள். சகல சக்திகளும் இணையாவிட்டால் இது சாத்தியமாகியிராது. ஐக்கிய தேசிய கட்சியால் இதனை தனித்து சாதித்திருக்க முடியாது.

ஜனாதிபதிக்கு பல சகோதரர்கள் உள்ளனர். தனது குடும்பத்தவர் ஒருவரை அரச திணைக்களத்தின் தலைவராக நியமிப்பது சட்ட விரோதமானதல்ல. அவருக்கு தகுதியிருந்தால் அது பிரச்சினையேயல்ல. அரச திணைக்களங்கள் முழுவதும் ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டால் தான் பிரச்சினை.

100 நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டிய கடினமான முக்கிய பணி அரசமைப்பில் மாற்றங்களே. நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது மற்றும் தேர்தல் முறைகளில் மாற்றங்களை கொண்டு வருவது குறித்து கட்சிகள் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். ஆகவே எங்கள் முன்னுரிமை என்பது அரசியலமைப்பு மாற்றங்கள், சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத்துவது தொடர்பானது. ஏனைய விடயங்களை புறக்கணிக்க வேண்டும் என நான் தெரிவிக்கவில்லை.

அந்த விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பம் பொதுதேர்தலில் மக்களுக்கு கிடைக்கும். தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பொறுத்தே அனைத்தும் அமையலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# ஜனாதிபதியும் சந்திரிகாவும் இணைந்து மேடைப்பிரசாரம்





(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றாக மேடை பிரசாரங்களை நடத்தப் போவதாக தெரிவிக்கப்படுகிறது.

தங்களின் கட்சியின் வெற்றிக்காகவே இவர்கள் ஒன்றாக இணைந்து செயற்படப்போவதாக இன்றைய சிங்கள நாளேடு ஒன்று அதன் பிரதான செய்தியை வெளியிட்டுள்ளது.

இவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேடைகளில் ஒன்றாக பிரசாரங்களை முன்னெடுத்தால் வெற்றி வாகை சூடும் சந்தர்ப்பம் அதிகமாக ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# யுத்தக் குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய புதிய ஆணைக்குழு தேவையில்லை-கூட்டமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பான விசாரணைக்கு புதிய ஆணைக்குழு நியமிக்க அவசியம் இல்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்பொழுது வரை யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச விசாரணைகள் பல இடம் பெற்று வருகின்றன.

குறித்த விசாரணை குழுவினால் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமான செயற்பாடாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய அரசாங்கம் நியமித்ததோடு தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவை ஒழிக்க வேண்டும்.

புதிய அரசாங்கத்தின் பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் ஆதரிக்கப் போவதில்லை.

அதற்காக புதிய அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தேசிய பிரச் சினை தீர்க்கும் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும் என சுரேஷ் பிரேமச்சந்திர இதன்போது தெரிவித்தார். (இ-5)

# கஞ்சா வைத்திருந்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த யாழ். நீதவான் பொ.சிவகுமார், குற்றவாளிகளை தலா 100 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு நேற்று தீர்ப்பளித்தார்.

மூன்று சந்தேகநபர்களும் யாழ்.திருநகர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


சந்தேகநபர்களை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளையில், அவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

இதேவேளை, கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரலாற்றுப் பதிவான குடியரசு தின நிகழ்வு

















இந்தியாவின் 66 ஆவது குடியரசு தின விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. டில்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதற்காக நேற்று முன்தினம் டில்லி வந்த அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு குடியரசு தின விழா தொடங்கியது. 9.45 மணிக்கு பிரதமர் நரேந்திர மோடி வந்தார். அங்குள்ள அமர் ஜோதி ஜவான் (உயிர் நீத்த வீரர்கள்) நினைவி டத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் குடியரசு தின அணிவகுப்பு நடைபெற்ற ராஜபாதை வந்தார். அவரை இராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர் மற்றும் முப்படை தளபதிகள் வரவேற்றனர்.

தொடர்ந்து துணை ஜனாதிபதி அமீத் அன்சாரி தனது மனைவியுடன வந்தார். அவரை பிரதமர் மோடி வரவேற்றார். தலைவர்கள் அமர்ந்து அணி வகுப்பை பார்வையிடுவதற்காக ராஜபாதையில் குண்டு துளைக்காத சுற்றிலும் கண்ணாடியால் ஆன சிறப்பு மேடை அமைக்கப்பட்டு இருந்தது. 9.55 மணிக்கு ஜனாதிபதி ஒபாமா மனைவி மிச்சேலுடன் காரில் வந்து இறங்கினார். அவரை பிரதமர் மோடி வரவேற்று விழா மேடைக்கு அழைத்துச் சென்றார். அப்போது லேசாக மழை பெய்ததால் ஒபாமாவுக்கு மழை அங்கி அணிவிக்கப்பட்டது.

சரியாக 10 மணிக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ராஜபாதை வந்தார். அவரது காரின் இருபுறமும் குதிரைப் படை வீரர்கள் அணி வகுத்து அழைத்து வந்தனர். விழா மேடை அருகே கார் நின்றதும். ஜனாதிபதியை பிரதமர் மோடி வரவேற்றார். ஜனாதிபதி ஒபாமாவும் சென்று ஜனாதிபதியை கைகுலுக்கி வரவேற்றார். தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் உயர் அதிகாரிகளை ஒபாமாவுக்கு பிரதமர் மோடி அறிமுகம் செய்து வைத்தார். (இ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்ச்செய்கையில் கபிலநிற தாவரத் தத்தியின் தாக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கையில் பரவி வரும் கபிலநிற தாவரத் தத்தியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாய பயிர் பாதுகாப்பு தொடர்பான பாடவிதான உத்தியோகத்தர் என். திவாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் மாவட்டத்தின் சில பகுதிகளில் அறுவடையை அண்மித்துள்ள நெற் பயிர்களில் கபிலநிற தாவரத் தத்தியின் தாக்கம் பரவலாக ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இதன் தாக்கமானது குமுழமுனையில் தண்ணி முறிப்பு, பெரிய வெளியிலும் முள்ளியவளையில் கணுக்கேணி குளவெளி, களிக்காட்டுவெளியிலும் புதுக்குடியிருப்பில் கைவேலி மற்றும் உடையார்கட்டு ஆகிய பகுதிகளிலும் கூடுதலாக காணப்படுகின்றது.

இப் பூச்சியானது நெற்பயிரின் அடித்தண்டிலிருந்து தாவரச்சாற்றை குற்றி உறுஞ்சுவதனாலும் சில நச்சுத்தன்மையான பதார்த்தங்களை உட்செலுத்துவதனாலும் நெற்பயிர் மஞ்ளாகி உலர்ந்து வயலில் அங்கங்கு எரிந்த நிலை போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.

இவ் அறிகுறியை அவதானிக்குமிடத்து விவசாயிகள் பயிரின் தண்டுப்பகுதியை அவதானித்தால் அங்கு அதிக எண்ணிக்கையிலான தத்திகளை அவதானிக்க முடியும்.



இத்தத்திகள் கூட்டமாக இடம்பெயர்ந்து வயலில் பிறிதோர் இடத்தில் இதேபோன்று தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதனை உரிய முறையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதவிடத்து விளைச்சலில் பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே விவசாயிகள் மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தங்கள் வயல்களில் காணப்படுமாயின் அவசியம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இந்த வகையில் இரசாயன பீடை நாசினிகளை பயன்படுத்த முற்படும் விவசாயிகள் கீழ் காணும் சிபார்சு செய்யப்பட்ட பீடை நாசினிகளை சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் விசிறி இப் பூச்சியின் தாக்கத்தை முகாமைத்துவம் செய்ய முடியும்.

| | இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் |
|---|---|---|
| 1. | தயமெதொக் சாம் | அக்ரரா |
| 2. | இமிடகுளோ திரிட் | அட்மயர்/ குறெவாடோ/ கோஹினூர் |
| 3. | பிப்றொமில் | ரீஜென்ற் |

மேற்படி நாசினிகளை விசுறும்போது நெற்பயிரின் தண்டின் கீழ்ப்புறம் காணப்படும் பூச்சிகளை தொடுகையுறும் வகையில் விசிறுவதன் மூலம் வினைத்திறனாக கட்டுப்படுத்தலாம்.

இதற்காக பயிர்களை சால்களாகப் பிரித்து நாசினி கீழே படும் வகையில் விசிறுதல் வேண்டும்.

இல்லாவிடில் வலுத்தெளிகருவி மூலம் (Power Sprayer) இந் நாசினிகளை விசிறுதல் பொருத்தமானதாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)











மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் காணாமற்போன, கடத்தப்பட்டவர்களை கண்டறியக்கோரியும் திருக்கேதீஸ்வர மனித புதைகுழி தொடர்பான விசாரணையை முன்னெடுக்கக் கோரியும் மன்னாரில் மாபெரும் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இந்த அமைதி ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலக வீதியூடாக மன்னார் நகர்ப்பகுதியை சென்றடைந்தது. இந்த ஊர்வலத்தில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் முகத்தில் கறுப்புத் துணி கட்டி பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## சுற்றுலா மையமாக மாறும் வன்னேரிக்குளப் பிரதேசம்

### கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் சுற்றுலா மையமாக தெரிவு செய்யப்பட்டுள்ள வன்னேரிக்குளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை, கரைச்சி பிரதேச சபை முன்னெடுத்து வருவதாக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர சுந்தரலிங்கம் தயாளன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக்குளம், 375 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்புக்கு காலபோக நெற்செய்கைக்குத் தேவையான நீர்ப்பாசனத்தை வழங்கி வருகின்றது.

இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாக அமைந்துள்ள இதனை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்து, இந்தப் பிரதேசத்தையும் அதனை அண்டிய கிராமங்களையும் வளர்ச்சி பெறச் செய்யும் நோக்குடன் கரைச்சி பிரதேச சபையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்குளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த 2014ஆம் ஆண்டு, 14 இலட்சம் ரூபாய் பிரதேச சபையால் ஒதுக்கீடு செயயபபட்டு, குளத்தில் படகுச் சவாரி செய்யும் நோக்குடன் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு படகு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மிகுதி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அப்பிரதேசத்தில் காணப்படும் வெடிபொருட்கள் இடையூறாகக் காணப்படுகின்றன. வெடிபொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, கிளிநொச்சி மாவட்டச் செயலக கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு தெரியப்படுத்தப்பட்டு விரைவில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் உறுதியளித்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பின்னர், சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான வேலைத் திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும். அதற்காக 2015ஆம் ஆண்டு பிரதேச சபையின் வரவுசெலவுத் திட்டத்தில் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வன்னேரிக்குளம் சுற்றுலா மையமாக மாற்றப்படவேண்டும் என்ற தீர்மானம் வடமாகாண சபையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை வடமாகாண சபையின் கீழுள்ள சுற்றுலாத் துறை மேற்கொள்ளவுள்ளது. அவர்களுடன் இணைந்து கரைச்சி பிரதேச சபையும் இந்த நடவடிக்கையை முன்னெடுககும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பத்துத்தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

விழாக்காலக் குருக்களாக கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக் குருக்கள் ஆகியோர் பணியாற்றுவார்கள்.

தினமும் வவுனியா நிருத்திய நிவேதன நுண்கலைக்கல்லூரி அதிபர் வீரசிங்கத்தின் நட்டுவாங்கத்தில் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெறும். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1052

# அன்பின் வலிமை



**வி**ஜயபுரி ராஜ்யத்தை ஆண்டு வந்த உக்கிரசேன மன்னருக்கு, வீரசேனன் என்ற மகன் இருந்தான். சிறுவயது முதலே வீரசேனன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக விளங்கினான். வாலிபன் ஆனதும் போர்க்கலைகள், ராஜதந்திரங் கள், அரசாங்க நிர்வாகம் அனைத்தை யும் கற்றுக்கொண்டு, ஓர் இளவரசனுக் குரிய சகல இலட்சணாங்களுடன் திகழ்ந் தான்.

சில சமயங்களில், சிக்கலான அரசாங்க விவகாரங்களில் உக்கிரசேனரே தன் மகனைக் கலந்து ஆலோசிப்பதுண்டு. தன் மகனுக்குப் பட்டம் சூட்டினால், அவன் மிகச் சிறந்த முறையில் ஆட்சி செய்வான் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட, ஒரு நன்னாளில் வீரசேனனுக்கு முடிசூட்டி விட்டு தான் ஓய்வுபெற்றார்.

மன்னரான பின் வீரசேனன் ஓய் வின்றி உழைத்து தன் தந்தையை விட சிறப்பாக ஆட்சியை நிர்வகித்தான். நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுப்பதில் மந்திரிகளுடனும், சேனாதி பதிகளுடனும், அதிகாரிகளுடனும் பெரும்பாலான நேரத்தை செலவழித்தான். அவனுடைய அளப்பரிய திறமையினால், நாடு சில ஆண்டுகளிலேயே மகா உன்னத நிலையை அடைந்தது.

வீரசேனனுக்குத் திருமணம் செய்து வைக்க அவன் தந்தை விரும்பினார். அதைப் பற்றிக் கேட்டதும், வீரசேனன் தனக்குரிய பெண்ணைத் தானே தேர்ந்தெடுப்பதாகக் கூறினான். குடிமக்களின் நலனுக்காகவே நாளெல்லாம் பாடுபட்ட வீரசேனனுக்குதான் ஓர் எளிய குடும்பத்துப் பெண்ணை விவாகம் செய்வதுதான் சரியாக இருக்கும் என்று தோன்றியது. மனைவியாக வரப்போகும் பெண் கல்வியில் சிறந்தவளாகவும், புத்திசாலியாகவும், தன்னுடைய அரசாங்க வேலைகளில் தனக்கு யோசனை கூறும் அளவிற்கு அறிவு உடையவளாகவும் இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தான்.

அதற்காக, தன் ராஜ்யத்தில் உள்ள இளம் பெண்களை அழைத்து, அவர்களுக்குள் போட்டி வைத்து, தனக்குத் தகுந்த பெண்ணைத் தேர்ந்தெடுக்க முடிபு செய்தான்.

அதற்காக அறிவிப்பு பிறப்பித்ததும் ராஜ்யத்திலுள்ள ஆயிரக்கணக்கான பெண்கள் போட்டி போட்டு விண்ணப்பித்தனர்.

புத்திசாலித்தனம், சமயோசிதம், நினைவாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் பல கடுமையான போட்டிகளுக்கு அவர்களை உட்படுத்தி, அவர்களுள் இருவரைத் தேர்ந்தெடுததான். அவர்களில் ஒருத்தி தேவயானி! மற்றொருத்தி சிவரஞ்சனி! இருவரும் எல்லாப் போட்டிகளிலும் சரிசமமாக இருந்ததால், இருவரையும் மேலும் சில போட்டிகளுக்கு அழைத்தான்.

இருவரிடமும், "உங்களில் ஒருத்தி மட்டுமே என் மனைவியாக முடியும். நான இப்போது தரும் சவாலை யார் வெற்றி கரமாக முடிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து நான் அதை முடிபு செய்வேன்.

ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சவாரி செய்யும் இளைஞன் ஒருவனை நீங்கள் என்னிடம் அழைத்து வர வேண்டும். யார் வெற்றி பெறுகிறீர்கள் என்று பார்க் கலாம்!" என்றான்.



சற்றுநேரம் சென்ற பின், அந்த இரு பெண்களும் வீரசேனன் முன் இரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி சூரிய ஒளி படும் படி மன்னன் முன் வைத்தனர். புராணத்தின்படி சூரியபகவான் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சஞ்சாரம் செய்பவர்! இருவரின் மதி நுட்பத்தையும் கண்டு வீரசேனன் வியந்து போனான்.

சற்று நேரம் யோசித்துவிட்டு, "பெண்களே! கடைசியாக ஒரு போட்டி வைப்பதற்கு முன் உங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்!" என்றான்.

உடனே சிவரஞ்சனி சற்றும் தயங்காமல், "நான் ராமாபுரத்தைச் சேர்ந்த ஏழை விவசாயி மாணிக்கத்தின் மகள்!" என்றாள்.

ஆனால், தேவயானி, "நீங்கள் என்னுடைய அறிவைத்தான் சோதிக்க வேண்டுமே தவிர, நான் யார் என்பது போன்ற ஆராய்ச்சிகளில் இறங்கக் கூடாது" என்றாள். ஆனால் வீரசேனன், "உன்னுடைய பெற்றோரைப் பற்றிக் கூற நீ ஏன் தயங்க வேண்டும்? நீ ஏதோ சொல்லக் கூடாத ரகசியத்தை மறைக்கிறாய் என்பது விளங்குகிறது" என்று வற்புறுத்தினான்.

வெகுநேரம் தயங்கியபின், தேவயானி, "நான் கோசல ராஜ்யத்து யுவராணி தேவயானி.

உங்களை எப்படியாவது திருமணம் செய்து கொண்டு விட வேண்டும் என்ற ஆசையினால், எளிய குடும்பத்துப் பெண்ணைப் போல் நடித்தேன். தயவு செய்து என்னைப் புறக்கணித்து விடாதீர்கள்!" என்று வேண்டினாள்.

"அப்படியானால், உண்மையை மறைத்து நீ போட்டியில் பங்கேற்று என்னை இதுவரை ஏமாற்றி இருக்கிறாய்.

எளிய குடும்பத்துப் பெண்ணை மட்டுமே நான் மணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று அறிவித்துள்ள நிலையில் என் லட்சியத்திற்குப் புறம்பாக என்னால் நடக்க முடியாது!" என்றான் வீரசேனன்.

அதற்கு அவள், "நான் உங்களை நேசித்தேன், ஆகையால் உங்களை திருமணம் புரிந்து கொள்ள இங்கு வந்தேன். அதற்கான தகுதியையும் அடைந்தேன். என்னை நீங்கள் நிராகரிப்பதால் அதற்குக் கூடிய விரைவில் பதில் சொல்லியே ஆகவேண்டும்" என்று கூறியவாறு தேவயானி அங்கிருந்து வேகமாக வெளியேறிவிட்டாள். (தொடரும்)

01.2015
27

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1695 - ஒட்டோமான் பேரரசின் மன்னன் இரண்டாம் அஹமது இறந்ததை அடுத்து இரண்டாம் முஸ்தபா மன்னனானான்.
- 1880 - தாமஸ் எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1888 - தேசிய புவியியற் கழகம் (National Geographic Society) வோஷிங்டன் டிசியில் அமைக்கப்பட்டது.
- 1915 - ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் ஹெயிட்டியை ஆக்கிரமித்தனர்.
- 1918 - பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1924 - விளாடிமிர் லெனினின் உடல் மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டது.
- 1926 - ஜோன் லோகி பயார்ட் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்திக் காட்டினார்.
- 1938 - நியூயோர்க்கில் நயாகரா நீர்வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அச்சு நாடுகளின் இரண்டாண்டு லெனின்கிராட் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.
- 1996 - நைஜரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப் பட்ட ஜனாதிபதி மஹமான் ஊஸ்மன் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இராணுவத் தளபதி இப்ராகிம் மயினாசரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### பிறப்புகள்

- 1775 - பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ. 1854)
- 1832 - லூயிஸ் கரோல், ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர், கிறித்துவப் பாதிரியார் (இ. 1898)
- 1903 - ஜோன் எக்கில்ஸ், நோபல் பரிசு பெற்ற ஆஸ்திரேலியர் (இ. 1997)
- 1936 - சாமுவேல் டிங், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1944 - மைரேயட் கொரிகன், நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள்

- 1814 - ஜொகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (பி. 1762)
- 1893- மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைப் பாடகர் (பி. 1844)
- 1967 - அப்பொலோ 1 விண்வெளி வீரர்கள்:

எட்வர்ட் வைட், (பி. 1930)
வேர்ஜில் கிரிசம், (பி. 1926)
ரொஜர் சாபி (பி. 1935).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு....

..கே.ஆர்.விஜயா சொந்த மாகத் தயாரித்த "நான் வாழ வைப்பேன்" படத்தில், சிவாஜி கணேசனுடன் ரஜினி இணைந்து நடித்தார். மிகப் பிரமாதமாக நடித்து, சிவாஜியின் பாராட்டைப் பெற்றார. **"நினைத்தாலே இனிக்கும்"** படத்தைத் தொடர்ந்து ரஜினி நடித்த படம் **"தர்மயுத்தம்."** இதை, சாரு சித்ரா பிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில், டி.ஆர்.சீனிவாசன் தயாரித்தார்.

**ஸ்ரீதேவி**

இதில் ரஜினிக்கு ஜோடி ஸ்ரீதேவி. மற்றும் லட்சுமிஸ்ரீ, சச்சு, புஷ்பலதா, தேங்காய் சீனிவாசன், வி.கோபால கிருஷ்ணன் ஆகியோரும் நடித்தனர். கதை-வசனத்தை பீட்டர் செல்வகுமார் எழுத, கண்ணதாசன், எம்.ஜி.வல்லபன், "ஹரிராம் ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு இசை அமைத்தவர்: இளையராஜா. படத்தை ஆர்.சி.சக்தி டைரக்ட் செய்தார். தங்கை மீது பாசம் உள்ள தொழில் அதிபராக ரஜினி நடித்தார். சற்றே மாறுபட்ட வேடம். மிகச்சிறப்பாக நடித்து ரசிகர்களைக் கவர்ந்தார். இந்தப் படத்தில், ரஜினிக்காக மலேசிய வாசுதேவன் பாடிய, **"ஒரு தங்க ரதத்தில்..."** என்று தொடங்கும் பாடல், பெரிய "ஹிட்" ஆயிற்று. **"தர்மயுத்தம்"**, அதே பெயரில் தெலுங்கில் "டப்" செய்யப் பட்டது.

**நான் வாழ வைப்பேன்**

ரஜினிகாந்தின் திரை உலகப் பயணத்தில், ஒரு மைல் கல் **"நான வாழவைப்பேன்."** இதில் சிவாஜியுடன் இணைந்து நடித்தார். நடிகை கே.ஆர்.விஜயாவும், அவர் கணவர் வேலாயுத நாயரும் தயாரித்த படம். அமிதாப்பச்சனும், வில்லன் பிரானும் நடித்த **"மஜ்பூர்"** என்ற இந்திப் படத்தை தழுவி தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தில் கே.ஆர். விஜயா, புஷ்பமாலா, ஏ.சகுந்தலா, ஜெய்கணேஷ், தேங்காய் சீனிவாசன், பூர்ணம் விஸ்வநாதன், வி.கே. ராமசாமி, செந்தாமரை ஆகியோரும் நடித்தனர். திரைக்கதை - வசனத்தை ஆரூர்தாஸ் எழுதினார். யோகானந்த் டைரக்ட் செய்தார்.


நான் வாழவைப்பேன் படத்தில் சிவாஜி ரஜினி

### ரஜினியின் அற்புத நடிப்பு; சிவாஜியின் பாராட்டு

**வியக்க வைத்த நடிப்பு**

படத்தில், இடைவேளைக்குப் பிறகுதான் ரஜினிகாந்த் வருவார். வில்லன் போன்ற கேரக்டர் என்றாலும், சிவாஜியைக் காப்பாற்ற உயிர்த்தியாகம் செய்யும் குணச் சித்திர வேடம். இப்படத்தில், ரஜினியின் நடிப்பு புதிய பரிமாணத்துடன், சிகரத்தைத் தொட்டது. தன்னுடைய குருவான சிவாஜிகணேசன் முன்னிலையிலேயே அபாரமாக நடித்து, அவருடைய பாராட்டைப் பெற்றார்.

**சிவாஜி சொன்னது என்ன?**

இந்தப்படம் தயாரானபோது தன் வேடம் பற்றியும், ரஜினி வேடம் பற்றியும் சிவாஜி என்ன சொன்னார்? ரஜினியின் நடிப்பை பார்த்து விட்டு, அவர் கூறிய கருத்து என்ன? - இதுபற்றி, அப்படத்தின் வசனகர்த்தாவும், சிவாஜியின் நெருங்கிய நண்பருமான ஆரூர்தாஸ் கூறியதாவது:- இந்தியில் அமிதாப்பச்சன் நடித்த வேடத்தில் சிவாஜிகணேசனும், "பிரான்" நடித்த பாத்திரத்தில் ரஜினிகாந்தும் நடிக்க ஏற்பாடாயிற்று. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பாக, அந்த இந்திப்படத்தை சிவாஜியும் நானும் பார்த்தோம். பார்த்து முடித்ததும் சிவாஜி என்னிடம் இப்படிக் கூறினார். ஆரூரான்! ஹீரோ அமிதாப் நடிச்சிருக்கிறது வெறும் "டம்மி" ரோல். அதில் நடிப்புக்கு "ஸ்கோப்" இல்லே. பிரான் ரோல்தான் "ஆக்டிங் ரோல்" அதுதான் ஆடியன்ஸ் மனசுல நிக்கும். கெஸ்ட்ரோலா அதைச செய்யலாமான்னு நினைக்கிறேன். இவ்வாறு சிவாஜி கூறியதும் நான் சொன்னேன்: உங்களையும் ரஜினியையும் வச்சிக்கிட்டு, ரஜினி ஹீரோ, நீங்க சைடு ரோல்னு சொன்னா சரியா இருக்குமா? தயாரிப்பாளர் ஒத்துக்கொள்வாரா என்பதையும் யோசிங்க. ஆமா. உண்மைதான். செய்தா, விஜயா - வேலாயுதம் இரண்டு பேருக்காக இந்தப் படத்துல நான் நடிக்கணும். இல்லேன்னா விட்டுடணும். நீங்க நடிச்சா நல்லாயிருக்கும். அதுமட்டுமில்லை. அந்தப் பையன் (ரஜினி) நல்லா வளர்ந்துகிட்டு வர்றான்.

அந்த வளர்ச்சிக்கு இந்தப் படமும் அவனுக்குப் பயன்படட்டுமே. நான் தான் எல்லாம் செய்திட்டேனே. இப்படித்தான் அப்போ ஜெமினி கணேசனும், நானும் சேர்ந்து நடிச்ச **"பெண்ணின் பெருமை"** படத்துல நான் விட்டுக் கொடுத்து வில்லன் பாத்திரத்தை எடுத்துக்கிட்டேன். ஓகே! செய்வோம் என்றார், சிவாஜி.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 60**

**...எ**ங்க நிக்கிறது ஒதுங்க இடமில்லாத காட்ல..? நாம நனஞ்சாப் பரவாயில்ல.

நனஞ்ச வெறகு எறியாதேங்கிற வருத்தத்துல வந்துக்கிட்டிருக்கா ரெண்டு பேரும்.

மேகாட்ல மழைபேஞ்சு காட்டோடையில் கரையறுத்து வருது செக்கச் செவேர்ன்னு செந்தண்ணி.

ஆத்தக் கடக்கனும் பாத்துவாடின்னு சொல்லிட்டு முழங்கால் தண்ணியில முன்னுக்கு போறா பெரியமூக்கி.

ஆத்தா முன்னுக்குப் போகட்டும்.

ஆழம் பாத்துப் பின்னுக்கப் போகலாம்ன்னு கரையில நிக்கிறா கருவாச்சி. பெரியமூக்கி கரையேறிட்டா.

ஆத்தாளுக்கு முழங்கால் தண்ணி இருந்தா இடுப்புத் தண்ணி இருக்கும் தனக்கு இது கருவாச்சி கணக்கு.

வெறகுக்கட்ட ஒத்தக்கையில புடிச்சிக்கிட்டே பாவாடைய இழுத்துச் சுருட்டி இடுப்புல சொருகி இறங்கிட்டா.

பாதி ஓடை கடக்க வெறகோட சேத்து அவள யாரோ இழுக்குற மாதிரி இருந்திச்சு.

என்னா ஏதுன்னு நிதானிக்குறதுக்குள்ள மேகாட்ல பேஞ்ச மழையில இடைக்காட்டுத் தண்ணியெல்லாம் ஒண்ணு கூடிக் கரை மீறி வருது காட்டாறு.

ஆயிரம் தண்ணிப் பாம்புக ஒண்ணு சேந்து வார மாதிரி சீறிப்பாஞ்சு வருதுக செந்தண்ணி அலைக.

கரையில ஏறி முழங்கால மடக்கிச் சீலயப் புழிஞ்சுக்கிட்டிருந்த பெரியமூக்கிக்குத் தெரிஞ்சு போச்சு தண்ணிக் கொடம் ஒடைஞ்சு வந்த புள்ள தண்ணியில போக போகுதுன்னு.

வந்திருடீ கருவாச்சி வந்துருடீ கத்துறா பாவம் கரையில கெடந்து.



தண்ணிக்குள்ள தரைக்கும் காலுக்குமிருந்த பிடிமானம் போய்க்கிட்டிருக்கு....

கருவாச்சி தத்தளிக்கிறா..

அலை மோதுறா......

தண்ணியும் குடிச்சுப்புட்டா.

அப்பவும் மார்க்கண்டேயன் புடிச்ச சிவலிங்கம் மாதிரி வெறகுக்கட்டை விடமாட்டேங்கிறா.

வெறக விட்டுர்றி கையக்கால ஒதறிக் கரைக்கு வாடி பெருங்கூச்சல் போடுறா பெரியமூக்கி.

கரையக் கொடஞ்ச கருவேல மரத்த விழுத்தாட்டி வேக வேகமா வருது வெள்ளம். சுத்தியும் முத்தியும் பாத்தா ஆத்தா.

கடவுள் மாதிரி கெடந்துச்சு கரையில ஒரு கல்லு.

என்ன வேகத்துல எடுத்தா என்ன வேகத்துல அத முந்தானையில முடிஞ்சா என்ன வேகத்துல அதத் தண்ணியில எறிஞ்சா... இன்ன வரைக்கும் அதை அறியமாட்டா பெரியமூக்கி.

கல்லோட வந்து தண்ணியில தொப்புன்னு விழுந்த முந்தானையைக் கருவாச்சி கெட்டியாப் புடிக்க இழு இழுன்னு அவள இழுத்து கரையில சேத்துட்டுத்தான் கால் பதிச்சு நின்னுருந்த கரையுடையவும் ஆத்துல விழுந்துபோனா பெரிய மூக்கி. ஆத்தா இப்ப ஆத்தோட போக யாத்தே யாத்தேன்னு கருவாச்சி கரையிலிருந்து கத்த வெள்ளத்தோட மெதந்து வந்த மாட்டுவாலப் புடிச்சு ஒரு பர்லாங்தள்ளித் தரையேர்றா பெரிய மூக்கி.

மக ஓடிப்போயி ஆத்தாளத் தூக்கி விடவும் என் தண்ணிக் கொடம் ஒடஞ்சு ஒரு பெறப்பு. இன்னிக்குத் தண்ணியில ஒனக்கு மறுபெறப்பு மகளேன்னு காட்டோடைக் கரையில பாட்டுப் படிக்க ஆரம் பிச்சுட்டா.

உசுரு பொழச்ச சந்தோசத்தை விட வெறகு போன வருத்தத்துல வீடு வந்து சேந்தாக தாயும் மகளும்.

மூஞ்சியோரம் கெடந்த முந்தானைய எடுத்து மோந்து பாத்தா கருவாச்சி.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுடன் இணைந்தது எனது துர்ப்பாக்கியம்தான்

## திஸ்ஸ அத்தநாயக்க கவலை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்காக வருந்துவதாகவும் அது தனது துர்ப்பாக்கியம் எனவும் முன்னாள் சுகாதார அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க கவலையுடன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்காக கவலையடைகின்றேன்.

ஏதோவொரு கெட்ட கிரக நிலைமை காரணமாக இவ்வாறு நேர்ந்திருக்கும்.

தொடர்ந்தும் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றுவேன்.

அரசியலை விட்டு விலகிப்போக எவ்வித உத்தேசமும் கிடையாது.

எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தீர்மானங்கள் குறித்து விரைவில் அறிவிப்பேன் என தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்று அரசியல் எதிர்காலம் குறித்து திஸ்ஸ அத்தநாயக்கவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக செயற்பட்டதுடன், கட்சியின் பொதுச் செயலாளராக பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் இறுதி வாரங்களில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட திஸ்ஸ அத்த நாயக்க, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வகித்து வந்த சுகாதார அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இந்தப் பதவியில் சுமார் 20 நாட்கள கூட கடமையாற்ற திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சூழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தினமன்று சூழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.



இராணுவ சூழ்ச்சித் திட்டம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணை மேற்கொண்டதன் பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இராணுவ சூழ்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தமை அம்பலமானால், அவ்வாறான அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த போது இராணுவ சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சிக்கு பிரதம நீதியரசரும் உடந்தை எனத் தெரிவிக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# செல்போனை படுக்கையிலிருந்து தள்ளி வையுங்கள்

### படுக்கையில் மட்டும் தூங்குங்கள்

இரவு படுக்கையில் படுத்தவுடன் சில நிமிடங்களில் தூக்கம் வராவிட்டால், வேறு அறைக்குச் சென்று மனதுக்குப் பிடித்ததை செய்யலாமே தவிர, வேறொரு இடத்தில் தூங்க முயலக் கூடாது. எப்போதும் படுக்கையைத் தவிர்த்து ஏனைய இடங்களில் உறங்காதீர்கள். வேறு செயல் செய்யும் போது உறக்கம் வருவதுபோல



தோன்றினால், உடனே மீண்டும் படுக்கைக்குத் திரும்புங்கள்.

### படுக்கையறை சுத்தம் அவசியம்

படுக்கையறையை தினமும் சுத்தம்செய்வது அவசியம். மெத்தை விரிப்புகள், தலையணை போன்றவற்றை அவ்வப்போது நன்றாகத் துவைத்து பயன்படுத்தவும். வாசனைத் திரவியங்களை அதிகம் பயன்படுத்தக் கூடாது.

படுக்கையறையில் குளிர்சாதன வசதி செய்திருந்தால், அறையில் நிலவும் வெப்பநிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும். தூக்கத்தில் இருந்து எழுந்து ஏ.சி அறையில் வெப்பநிலையைக் கூட்டுவதையோ, குறைப்பதையோ தவிர்த்து, தூங்குவதற்கு முன்னரே மிதமான வெப்பநிலையில் ஏ.சி அளவை வைத்து விட்டு உறங்குங்கள்.

படுக்கையறையில் தொடர்ந்து பல நாட்கள் டி.வி பார்த்துக் கொணடு உறங்குவதையோ, ரேடியோ அல் லது பாடல்களைக் கேட்டுக் கொண்டே உறங்குவதையோ தவிர்க்க வேண்டும். இல்லையெனில் டி.வி இல்லா விட் டாலோ, பாடல்கள் கேட்கா விட்டாலோ தூக்கம் வராது. எனவே உங்களுக்குத் தூக்கம் வருவது போன்ற உணர்வு ஏற்படும்போது டி.வியை அணைத்து விடுங்கள். ரேடியோ, பாடல்கள் கேட்பதை நிறுத்தி விடுங்கள்.

### ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள்

உணவுக்கும் உறக்கத்துக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. நெஞ்சு எரிச்சலை ஏற்படுத்தும் உணவுகள், அஜீரணக் கோளாறு, வயிற்றுப் போக்கு போன்றவற்றை ஏற்படுத்தும் உணவுகளை தவிருங்கள். தூக்கம் கலைந்து கழிப்பறைக்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், ஆழ்ந்த தூக்கம் வராது.

இரவு, படுக்கைக்குச் செல்லும் போது பசி அதிகமாக இருந்தால், அரை டம்ளர் வெதுவெதுப்பான பால் குடியுங்கள்.

இரவு நேர உணவு என்பது, நிறைந்த புரதச்சத்து, குறைந்த அளவு கொழுப்புச்சத்து மற்றும் மாப்பொருள் உள்ள உணவாக இருக்கட்டும்.

கேக், கிறீம் பிஸ்கட், பீட்சா, எண்ணெய் அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகள் போன்றவற்றை கட்டாயம் தவிர்க்கவும்.

### அலுவலக பதற்றம் வேண்டாம

அலுவலகத்தில் ஏற்பட்ட அவமானம், நிராகரிப்பு, சண்டை சச்சரவுகள் போன்றவற்றை வீட் டுக்குள் கொண்டுசெல்லாதீர்கள். செருப்பைக் கழற்றி வைக்கும் போதே, மனதில் உள்ள பாரங்களையும் இறக்கிவைத்துவிட்டு வீட்டுக்குள் நுழையுங்கள்.

அலுவலக பதற்றத்துடன் வருபவர்கள், இரவு நேரத்தில் குடும்பத்தோடு அமர்ந்து நகைச்சுவைக் காட்சிகள், கார்ட்டூன் போன்றவற்றை அரை மணி நேரம் பாருங்கள்.

மனதை அமைதிப்படுத்தும் இசை கேட்டு, மனதை ஒருமுகப் படுத்துங்கள். இந்தப் பயிற்சிகளைச் செய்துவந்தால் மனம் அமைதியாகும்.




தம்பதிகள் தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர்க்கவும். இரவு நேரத்தில் சர்ச்சைக்குரிய விடயங்களை விவாதிக்காமல் உறங்கச் செல்லுங்கள்.

### இரவுக்காட்சி வேண்டாமே

இரவு நேரத்தில் திரைப்படம் பார்ப்பதால் மூன்று மணி நேரத்திற்கும் அதிகமாக நமது மூளை ஓய்வு எடுக்காமல் கவனித்துக் கொண்டே இருக்கும். மேலும் திரைப்படத்தின் தாக்கமும் மனதிலேயே இருக்கும்.

வன்முறை நிறைந்த படங்கள், அமானுஷ்யம் மற்றும் பேய்ப்படங்கள் பார்ப்பது, மனதை சஞ்சலப்படுத்தும். இதனால் தூங்கும் போது அதிபயங்கரமான கெட்ட கனவுகள் வரலாம். இவை உறக்கத்தைப் பாதிக்கும். எனவே இரவு நேரம் படம் பார்ப்பதைத் தவிருங்கள்.

### இரைச்சல் எரிச்சலை ஏற்படுத்தும்

இரவு நேரத்தில் இரைச்சலான இடங்களில் இருப்பதைத் தவிருங்கள். இரவு நேரத்தில் இரைச்சல் எரிச்சலை ஏற்படுத்தும்.

இரவு நேரத்தில் மென்மையான இசையைக் கேட்பதே சிறந்தது.

இரவு நேரத்தில் கை,கால்களைப் பிடித்துவிட்டு மசாஜ் செய்து கொள்வது நன்றாகத் தூக்கத்தை வரவைக்கும்.


### செல்போனைத் தூர வையுங்கள்

இரவு நேரத்தில் படுக்கைக்குச் செல்லும் 15 நிமிடங்களுக்கு முன்பே, செல்போனை அணைத்து விடுங்கள். அல்லது சைலன்ட் மோடில் வைத்துவிடுங்கள்.

செல்போனில் ஹெட்போனை மாட்டிக்கொண்டு படுத்து உறங்குவதைத் தவிருங்கள். இரவு நேரத்தில் தொடர்ந்து ஹெட்போனை மாட்டிக்கொண்டு இசை கேட்டுக் கொண்டிருந்தால், கேட்கும் திறன் பாதிக்கப்படும்.

செல்போனை படுக்கையில் இருந்து தள்ளி வையுங்கள். செல்போனை மிக அருகிலேயே வைத்துக்கொண்டு தூங்குவதால், செல்போனில் இருந்து வரும் கதிர்வீச்சு உடலில் உள்ள நரம்பு மண்டலத்தைத் தாக்கக்கூடும். எனவே செல்போனை தொலைவில் வைப்பது நல்லது.

### முகப் புத்தகம் அவசியம் இல்லை



இன்றைய இளைஞர்கள் பலர் இரவு நேரங்களில் தொலைபேசியில் பேசிக்கொண்டோ அல்லது வட்ஸஅப்பில் தகவல் அனுப்பிக் கொண்டோ, முகப்புத்தகத்தில் அவர்களது போட்டோவுக்கும் ஸ்டேட்டஸ்"க்கும் எத்தனை விருபம் விழுந்திருக்கிறது, எவ்வளவு விமர்சனம் வந்திருக்கிறது என தேடுதல் செய்து கொண்டே இருக்கிறார்கள். இதனால் முறையாகத் தூங்குவது இல்லை. 10 மணி நேரத்திற்கும் அதிகமாகப் படுக்கையறையில் படுத்துக்கொண்டு இருக்கும் இளைஞர்கள், ஐந்து மணி நேரம்கூடத் தூங்குவது இல்லை. மேலும் ஆழ்ந்த தூக்கம் என்பதே அவர்களுக்கு இல்லை.

எனவே, இளைஞர்கள் அடுத்த நாள் தங்களது கல்வி, வேலை சார்ந்த விடயங்களில் மந்தத் தன்மையுடன் காணப்படுகின்றார்கள்.

- மாணவர்கள் தொடர்ந்து எலெக்ட்ரோனிக் பொருட்களில் கவனம் செலுத்துவதால், சரியாகத் தூங்காவிட்டால் அவர்களது கற்பனைத்திறன் மற்றும் அறிவுத்திறன் குறைந்துவிடும்.

### சித்த மருத்துவம் தரும் ஆலோசனை

சித்த மருத்துவத்தின்படி அனைவருக்கும் 8 மணி நேரத் தூக்கம் அவசியம். தூக்கம் வராமல் தவிப்பவர்களுக்கு, மாத்திரை மருந்துகளின்றி எளிய வழிகள் சித்த மருத்துவத்தில் உண்டு.

தினமும் ஒரு தேக்கரண்டி கசகசா எடுத்து, அதில் நீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். பிறகு, பசும் பாலில் கலந்து, படுக்கைக்குச் செல்லும் முன் அருந்து ங்கள்.

அமுக்கிராங்கிழங்கு சூரணம் ஒரு தேக்கரண்டி எடுத்து, பாலில் கலந்து அருந்த, தூக்கம்வரும.

வாரம் இருமுறை எண் ணெய் தேய்த்துக் குளிப்பது உடலுக்கு நல்லது.

மருதாணிப் பூவை தலையணைக்கு அடியில் வைத்துத் தூங்கினால், நன்றாகத்தூக்கம்வரும்.

மாலை நேரத்தில், வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். படுக்கைக்குச் செல்வதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன் னர குளிப்பது, தூக்கம் வர உதவும்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிச் சென்ற திருடர்களை மீளவும் அழைக்கும் அரசு!

**நாட்டை விட்டு தப்பிச் சென்ற ஊழல் மோசடிக்காரர்கள், திருடர்கள் மீளஅழைக்கப்ட்டும் னஇலங்கைஅரசாங்கம் தெரிவித்துள்ளது. இன்டர்போலின் உதவியுடன் நாட்டை விட்டு தப்பிச் சென்ற அமைச்ச்ர்கள், அரசஅதிகாரிகள் மீள அழைக்கப்படுவர். ஊழல் மோசடிகள் செய்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட சில முக்கிய அமைச்ச்ர்கள், அரச அதிகாரிகள் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

## அமைச்சர் ஜோன் அமரதுங்க உறுதி



ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றவர்கள் இவ்வாறு அழைக்கப்பட உள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய, நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர போன்றவர்களை மீள நாட்டுக்கு அழைக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிரான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்படவுள்ளது. விசாரணைகள் பூர்த்தியானதன் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள்,அரச அதிகாரிகள் பலருக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.(இ-5)

# கடற்படையில் யோஷிதவின் பிரவேசம் குறித்து விசாரணை நடத்துமாறு கோருகிறது ஜே.வி.பி.

இலங்கை கடற்படையில்யோஷித ராஜபக்ஷ இணைத்துக் கொள்ளப்பட்ட முறை தொடர்பிலும் பிரித்தானியாவின் புகழ்பெற்ற கடற்படை கற்கைநெறி கல்லூரியில் புலமைப் பரிசில் பெற்று இரண்டு வருட கற்கை மேற்கொண்டமை தொடர்பிலும் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியினர்.பாதுகாப்பு செயலாளர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்கவிடம் கோரியுள்ளனர்.இது தொடர்பில், பாதுகாப்பு செயலாளரிடம் மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றப்பத்திரம் ஒன்றினை கையளித்துள்ளனர் என்று மேல் மாகாண சபை உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். இதே வேளை இது தொடர்பான விசாரணைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமெனவும் இல்லையேல் போராட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார். மகிந்த அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஜே.வி.பி.அதிகளவு அக்கறை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 | 160 | 130 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 500 | 700 | 800 | 600 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 150 | 120 | 160 | 120 |
| கரட் | 200 | 150 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 140 | 120 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 120 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 80 | 120 | 70 |
| பாகற்காய் | 150 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 140 |
| லீக்ஸ் | 280 | 240 | 320 | 300 |
| பீற்றூட் | — | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | — | 350 | 320 | 250 |
| முருங்கைக்காய் | — | 800 | — | — |
| போஞ்சி | — | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 140 | 170 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 40 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 45-50 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 140 | 120 | 100 |

# 13-வது திருத்தத்தை அமுலாக்குவது குறித்து கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு இல்லை!

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து கட்சிகளுக்கு இடையில் இன்னமும் இணக்கப்பாடு எதுவும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாட்கள் திட்டத்திற்கு மட்டுமே ஜாதிக ஹெல உறுமய கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்துவது குறித்து எவ்வித பேச்சுவார்த்தைகளும் கட்சிகளுக்கு இடையில் நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அரசியல் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் அண்மையில் கருத்து வெளியிட்டதாக ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்தி குறித்து சிங்கள பத்திரிகையொன்று நிசாந்த சிறிவர்ணசிங்கவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 265

சஜன் வினோ




வினோத் குமார்




சக்தி வேல்

கல்வி அறிவில்லாத ஒரு தந்தை, நன்கு படித்த தன் மகனோடு காட்டுக்குள் போனார். இரவு நெருங்கியதால், இருவரும் ஓர் இடத்தில் கூடாரம் அமைத்துத் தங்கினார்கள்.


நள்ளிரவில் கண் விழித்த தந்தை, தன் மகனைத் தட்டி எழுப்பி, “மகனே, வானத்தைப் பார். உனக்கு என்ன தெரிகிறது?” என்று கேட்டார். “கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் தெரிகின்றன” என்றான் மகன்.. “இதில் இருந்து உனக்கு என்ன தெரிகிறது?” என்றார் அப்பா...

“விஞ்ஞான ரீதியாக சொல்வதென்றால், ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களும் கோள்களும் இந்தப் பால் வீதியில் உள்ளன” என்றான்.



பளார் என்று ஓர் அறைவிட்ட அப்பா சொன்னார். “டேய், மடையா, நம் கூடாரத்தை யாரோ திருடி விட்டார்கள்...”

தசா ஜெயா




மகேஸ் உதயன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அறியப்படாத அந்த தேவதை” ஜனாதிபதியாயிற்று!



எப்படியும், 1931 ஆம் ஆண்டு போன்றதொரு முற்பட்ட காலத்திலிருந்தே சர்வதேச ரீதியில் வயது வந்தோருக்கான தேர்தல் வாக்குரிமையை நடைமுறைப்படுத்தி வருகின்ற இலங்கை போன்றதொரு ஜனநாயக நாட்டில் இராணுவ சதிப்புரட்சி ஒன்றுக்கான

*சண்டே லீடர் பத்திரிகைக்கு என்.சத்தியமூர்த்தி எழுதிய அறியப்படாத அந்த தேவதையே ஜனாதிபதியாயிற்று என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.*

சாத்தியக்கூறுகள் பற்றி தேர்தலுக்கு முன்னரே வெளிவந்துகொண்டிருந்த பரவலான ஊகங்கள் பற்றி சரியான முறையில் அறிந்துகொள்வதற்கோ அல்லது மறுப்பதற்கோ எவரும் அந்த நேரம் இல்லாதிருந்தது துக்ககரமானதேயாகும். விடயம் எதுவாக இருப்பினும் ஆயுதப்படைகள் மத்தியிலும் அவர்களது குடும்பங்கள் மத்தியிலும் ஜனாதிபதி சிறிசேனாவுக்கான சிங்கள வாக்குகளின் சொந்தப் பங்கு ஒன்று இருக்கவேதான் செய்கிறது.

பரப்பப்பட்டுக்கொண்டிருந்த வதந்திகள் அத்துடன் மட்டும் நின்று விடவில்லை. UNP யைச் சேர்ந்த எதிர்க்கட்சியின் மூத்த தலைவரும் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச மகனும் ஜனாதிபதி ராஜபக்சவின் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வருமான சஜீத் பிரேமதாச, அரச தரப்புடன் இணைந்துகொண்டார் என்ற ஒரு செய்தியை அரச நிர்வாகத்திலுள்ள றூபவாகினி கூட்டுத்தாபனம் தேர்தல் நாள் ஒளிபரப்பாக தொலைக்காட்சி மூலம் ஒளி- ஒலி பரப்பி யிருந்தது.

உண்மையைக் கண்டறிவதற்கு றூபவாகினி நிலையத்திற்கு நேரடியாகவே சென்றிருந்த தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அது பற்றிய மறுப்பு- அறிக்கையொன்றினை அதே அலைவரிசையில் விடுப்பதற்கான உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இதுபோன்ற விசமத்தனமான பிரச்சாரங்களில் எதிரணியும் ஈடுபடாமலிருக்கவில்லை. நகருக்கு சென்ற, ஹெல உறுமயவின் (‘JHU’) பாட்டளி சம்பிக்க ரணவக்க, தான் சில தினங்களுக்கு முன்னரே கிளிநொச்சி சென்றபோது பிரத்தியேக தமிழர் பிரதேசமான வட கிளிநொச்சிப் பகுதிகளில் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி தரப்பினர் கொண்ட புகைப்படத்தில் ஜனாதிபதியுடன் காணப்படும் வழுக்கைத்தலை மனிதரே புலிகளின் முன்னாள் ஆயுத இறக்குமதி ஏற்பாட்டாளர் ‘கே.பி’ என கண்டுகொண்டதாக புரளியொன்றை கிளப்பிவிட்டிருந்தார். தமிழ் தேசியவாதிகள் தற்போது ஒரு தமிழ் துரோகியாகவே நோக்கும் ‘கே.பி’யை தனது கிளிநொச்சி மற்றும் அதே தினம் யாழ்ப்பாணத்திலும் நடந்த தேர்தல் பிரச்சாரங்களில் தன்னுடன் கூடவே வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு காட்சி கொடுக்க மகிந்த துணிவாரா என்பதற்கான உண்மையான பதிலை அன்றைய தினசரி பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளை சம்பிக்க ரணவக்க பார்த்திருப்பாரேயாகில் அறிந்து கொண்டிருப்பார்.

எந்த தரப்பிரனராக இருந்தாலும் அவர்கள் அனைவரதும் செயற்பாடுகள் இலங்கையின் தேர்தல் கால அரசியல் போராட்டத்திலும் சரி, யுத்தத்திலும், அன்பு பாராட்டும் விடயங்களிலும் சரி இவ்வித நியாயமானதாகவே எப்போதுமிருக்கும். ராஜபக்சவுக்கு எதிரான ஊடகங்களின் கருத்துப்படி சுதந்திரமான முறையில் தனித்தனியே போட்டியிடும் அந்த பதினேழு தனித்தனி வேட்பாளர்களுள் ஒருவ ரான ஆர்.ஏ.சிறிசேனா நாடு முழுவதுமான வாக்காளர்களை குழப்பும் நோக்கத்துடன் நிறுத்தப்பட்ட ஒரு கைப்பொம்மையேயன்றி வேறல்ல. இந்த சுயேட்சை வேட்பாளர்கள் மத்தியில் ஜனாதிபதி போட்டியாளர் ராஜபக்சவின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச என்ற பெயர் கொண்ட ஒருவருங்கூட இருந்தபோதிலும் ராஜபக்ச அணியினர் சார்பில் அத்தகைய ஒருவர் களமிறக்கப்பட்டாரா என்பது பற்றி எவருமே குறிப்பிட்டுக் கூறியிருக்கவுமில்லை.



## மூன்று வழிப்பாதைதான் என்றாலும்....

ஜனாதிபதி சிறிசேனா அவர்கள் தனது பணியை வகுத்துக் கொண்டார் என்று சொல்வதிலும் பார்க்க, தனது பணியின் முதல் 100 நாட்களுள் தாம் செய்து முடித்துவிடவேண்டுமென விரும்புகிற குறிப்பிடத்தக்க பணிகளுக்கான நடவடிக்கைகளை தேர்தலுக்கு முன்பே அவர் நிர்ணயித்துக்கொண்டு விட்டாரென்றே கூற வேண்டும். இவை அனைத்திலும் முன்னுரிமை அடிப்படையில் முதலில் இருப்பது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதேயாகும். பொதுச்சேவைகளிலான உயர் பதவிகளுக்கு, தெரிவுகளை மேற்கொள்வதற்கு சுதந்திரமான குழுக்களைப் பயன்படுத்துவது மட்டில் கொண்டுவரப்பட்டிருந்த 17 ஆவது திருத்தத்தையே மீண்டும் கொண்டு வருவது அல்லது உயிர்ப்பிப்பது (revival or restoration) என்று இங்கே கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கு முன்னரே குறிப்பிட்டுக் கூறப்பட்டது போன்ற நேரடி நடவடிக்கைகளாக இவை இருக்கப்போவதில்லை. ஏனென்றால், ஆழும் கூட்டணி அரசில் பங்காளிகளாக உள்ளடங்கும் (‘TNA)’ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் தத்தமது தூரநோக்குடன் கூடிய எதிர்கால கனவுகள் மட்டிலான சொந்தக் கருத்துகளுடனேயே இது சம்பந்தமான விடயங்களை அணுகுபவர்களாக இருப்பர். தற்போது நடைமுறையிலிருக்கும் 6 வருட பதவிக்காலத்தில் எஞ்சியிருக்கும் 2 வருடங்களையும் சேர்த்து இணைத்து ஆரம்பிக்கும் புதிய பதவிக்கால இறுதியில் தொடர்ந்துவரும் புதிய ஜனாதிபதி பத விக்காலங்கள் நான்கு வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட தாகவேயிருக்கும் என்ற பேச்சொன்று சிறிசேனா அவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்ட போதே முன்வைக்கப்பட்டிருந்தது.

எப்படியும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து அதிகாரங்களை ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரியின் தலைமையிலான மந்திரி சபைக்கும் பகிர்ந்தளிக்கும் நடைமுறைச் செயற்பாடுகள் மட்டிலான பிரதமமந்திரியின் அதிகார நடைமுறைப்படுத்தல்களில் தனிமனித்துவ ஆணவப் போக்குகள் தலைகாட்டும், தவிர்க்க முடியாத ஆபத்துக்களுக்குமுகங்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கான தமது திட்டத்தினை அறிமுகப்படுத்தியபோதும் இதுபோன்றதொரு நிலைமையே ஏற்பட்டது. அதன்போது ‘SLFE’ தரப்பினரிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பினை பாராளுமன்ற வாக்கொடுப்பின் மூலம் சமாளித்ததுடன் கட்சித் தலைவி சிறிமாவே பண்டாரநாயக்க அம்மையாரின் சிவில் மற்றும் தேர்தல் உரிமைகளைப் பறித்துக்கொண்டதன் பின்னரே அதனை நிறைவேற்றிக் கொள்ளவும் முடிந்திருந்தது.

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஏற்கனவே ஆணையளிக்கப்பட்டபடி பாதுகாப் புக்கான அரசியல் அதிகாரங்களை ஜனாதிபதியென்ற முறையில் தானே தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதாக கூறியதன் மூலம் ஒரு வழியில் அதுமட்டிலான பொறுப்பிற்குரிய சிறப்புரிமை இப்போது ஜனாதிபதி சிறிசேனா அவர்களுக்கே உரித்தாகிறது. ‘UNP’ யினது முழுக் கவனமும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பிலேயே இருக்கும் அதே நேரம் எதிரணி மத்திய உறுப் பினர்களான வலதுசாரி ‘JHU’வும் இடது சாரி ‘JVP யும் தற்போது உள்ளதிலும் பார்க்க கூடுதலான முறையில் பொறுப்பேற்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட ஒரு சில பிரத்தியேக அதிகாரங்களுடன் கூடிய விதமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையே விரும்புகிறவர்களாயுள்ளனர்.

ஒன்றுபட்ட இலங்கை என்ற கொள்கைக்கு மாறானதும் ‘TNA’ க்கு எப்படியும் ஏற்புடையதில்லாததுமான ஒரே தேசமாகவே இலங்கை இருக்கவேண்டுமென்றகொள்கையையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே இந்த இரு தரப்புகளுக்கும் சம முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது.

தேர்தலுக்கான பிரச்சார காலம் முழுவதும் ஒன்றுடன் ஒன்று முட்டிமோதி பிரச்சினைகளை வளர்க்காமல் தத்தமது நிலைப்பாடுகளை வெகு கவனமாக கையாண்ட எதிரணி அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தற்போது ஆளும் கூட்டணியொன்றாக தம்மை ஒழுங்கமைக்கும் நிலையில் தமக்கு உரித்தான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் வாக்குறுதிகள் மட்டில் பிணக்குகளின்றி இருந்தாலுங்கூட சிலரது போக்குகள் சிலநாட்களில் அல்லது வாரங்களில் எஞ்சிய ஏனையோரது அவதானிப்பிற்குள் வருவதன் மூலம் அசௌகரியங்களையும் ஏற்படுத்தலாம். அவர்களிடையில் தற்போது நிலவுவதும் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல்களுக்கிடைப்பட்ட காலத்திலும் ஏற்படக்கூடியதுமான இந்தவித வேறுபாடுகளை எவ்விதம் தீர்த்துக்கொள்ளப்போகிறார்கள் என்பதுடன் போரில் வெற்றி வாகை சூடிய முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவின் கடினமானதும் மீற முடியாததுமான கட்டுப்படுத்தும் சக்தியொன்று இப்போது இல்லாததான ஒரு நிலையில் அவர்களெல் லோரும் எப்படியாக நடந்துகொள்வார்கள் என்பதே எதிர்வரும் எந்த பாராளுமன்ற தேர்தல்களிலும் அவர்கள் பற்றிய வாக்காளர்களது நிலைப்பாட்டையும் இப்போதிலிருந்தே தீர்மானிப்பதாவுமிருக்கும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கோ அல்லது அதனை திருத்தியமைப்பதற்கோ 2/3 பெரும்பான்மை ஆதரவு பாராளுமன்றத்தில் தேவைப்படுவதாகவேயிருக்கும். ஆனாலும் பொது எதிரணிக்கு தற்போது அந்த பெரும்பான்மை இல்லை. ஜனாதிபதி சிறிசேனா அவர்கள் தற்போதும் தனது ‘SLFP’ பொதுச்செயலர் பதவி தொடர்வதாக மீண்டும் மீண்டும் மிகவும் கவனமாகவும் குறிப்பாகவும் கூறிவருவது அவருக்குப் பாதகமான கட்சித் தாவல்களையே ஊக்குவிப்பதாக இருப்பதுடன் தற்போது எந்தவித பதவி நிலையையும் ‘SLFP’யில் கொண்டிராத சந்திரிகா குமாரதுங்கவும் (CBK) கட்சிக்கான ஒருசில உள்ளூர் அமைப்பாளர்களை நியமித்திருப்பதுவுங்கூட அதே விதம் பாதிப்பினையே ஏற்படுத்தும். உண்மையில், ‘SLFP’ கட்சியை உருவாக்கிய மறைந்த S.W.R.D பண்டாரநாயக்க அவரது தந்தை என்ற விடயமொன்றுதான் கட்சியுடனான அவரது உறவாக உள்ளது.

## மாற்றத்திற்காக வாக்களிப்பு

ராஜபக்சவுடைய சர்வாதிகாரத்தனமான ஆட்சிக்கு எதிரான வாக்குகளின் வெற்றியே இத்தேர்தல் பெறுபேறுகள் என்று கூறினால் அது மிகையாகாது. உண்மையில் மிகவும் அதிகப்படியான நகரப்புற-மத்தியதர வர்க்கத்தினரே முன்னாள் ராஜபக்ச மற்றும் அவரது முன்னோடி ஆட்சியாளர்களதும் சர்வாதிகாரத்தனமான நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட அனுபவங்கள் காரணமாக கடும் சீற்றமடைந்திருந்தனர். இருந்தாலும் கிட்டத்தட்ட அவர்களைப் போன்ற அரைப் பங்கு மக்கள் தொகையினர் ராஜபக்சவுக்கே மீண்டும் வாக்களித்திருந்தனர் என்பதையும் அவர்கள் மனதிற்கொள்ள வேண்டும்.

மாற்றத்திற்கான வாக்களிப்பொன்றே அதுவாகும்! போர் முடிவடைந்து நீண்டகாலமாயிற்று, மக்களுக்கு இப்போது வேண்டியதெல்லாம் சமாதானமேயாகும். சமாதானத்தை மட்டும் பிரதிபலிக்கும் ஒரு தலைவரையே மக்கள் தேடிக் கொண்டிருந்தனர். ஒரு மாற்றீடாக முன்னெடுக்கப்பட்டிருந்ததும் ஜனநாயகச் செயற்பாடுகளை சிறப்பிக்கச் செய்வதற்கு அத்தியாவசியமான ஒரு அவசர தேவையாக இல்லாததுமான அபிவிருத்தி என்பது இப்போது சிறிது காத்திருக்கட்டும் அல்லது முடிந்தால் இணைந்தே போகட்டும்!

(முற்றும்)

**தமிழில்-யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த ஆட்சியில்

# பழிவாங்கப்பட்டவர்கள் குறித்து ஆராய ஜே.வி.பி. குழு நியமிப்பு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியின் கீழ், பழி வாங்கலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தொடர்பில் கண்டறிந்து, அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மகிந்த ஆட்சியில் நியாயம் கிடைக்காமல் மற்றும் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களின் தகவல் திரட்டும் குழு என்ற பெயரில் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.**

ராஜபக்ஷக்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் ஆகியவற்றினால் தங்களது சொத்துக்கள் மற்றும் வர்த்தகங்களை இழந்தவர்கள், கல்வி, தொழில்களை இழந்தவர்கள், கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் உள்ளிட்ட அனைவர் தொடர்பிலும் இந்த குழு ஆராய்ந்து, அவர்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்கும் என்று ஜே.வி.பி.யின் மேல் மாகாணசபை உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இவ்வாறான அசாதாரண நிலைமைகளுக்குள் தள்ளப்பட்ட வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் என அனைத்து தரப்பினரும் இந்த குழுவிடம் தங்களது முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

அதற்காக, 43/20, நுககஹா ஒழுங்கை, பிலியந்தல வீதி, மஹரகம என்ற விலாசத்துக்கு வந்தோ அல்லது கடிதம் மூலமோ முறைப்பாடுகளைச் செய்யலாம்.


அத்துடன், 011-2896394 அல்லது 0718106863 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டோ அல்லது politicsandsrilanka@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தங்களது முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும் என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரும் அறவழி போராட்டம் தொடரும்- சண்.குகவரதன்

(கொழும்பு)

புலிப்பூச்சாண்டி காட்டிக் கொண்டு கடந்த காலங்களில் கொழும்பில் மூடப்பட்ட வீதிகளை புதிய அரசு திறந்துவிட்டமை வரவேற்புக்குரியது. இதேபோன்று வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை தமது காணிகளில் வாழ வைப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்திய ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான சண்.குகவரதன், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தமது அறவழிப் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தார்.

வெள்ளவத்தையிலுள்ள அலுவகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே சண்.குகவரதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,



கடந்தகால ஆட்சியாளர்கள் தேர்தல்களில் வெற்றி பெறவும் தமது அரசியல் இருப்புக்காகவும் கொழும்பிலும் வடக்கிலும் புலிப் பூச்சாண்டி காட்டி அதியுயர் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தி மக்கள் குடியிருப்புகளையும் வழிபாட்டுத்தலங்களையும் மக்கள் நடமாடும் வாகனங்களின் போக்குவரத்தையும் தடைசெய்து இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கியது. ஆனால், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் நல்லாட்சியை ஏற்படுத்தும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கொழும்பு கோட்டை, ஸ்ரான்லி திலகரட்ன மாவத்தை அதியுயர் பாதுகாப்பு நீக்கப்பட்டு மக்கள் நடமாட்டத்திற்கும் வாகனப்போக்குவரத்திற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனை வரவேற்கின்றோம். அதேபோன்று வடக்கிலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி மக்கள் தமது சொந்தக்காணிகளில் வாழவும் கோயில்களில் வழிபாடுகளை நடத்தவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் தமிழ்மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களின் இதயங்களை இந்த அரசால் வெற்றி பெறமுடியும்.

அதேவேளை நீண்ட காலங்களாக எதுவிதமான குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

அதற்கான அறவழிப் போராட்டத்தை மனோ ஆரம்பித்துள்ளார். அந்தப் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை நாம் வழங்குவது மட்டுமன்றி தொடர்ந்து அரசுக்கு அழுத்தத்தை கொடுபபோம். நாட்டில் நல்லாட்சியை நிலைநிறுத்த மனித உரிமைகளை பாதுகாத்து மனிதாபிமானத்தை மதிப்பது முக்கியமான தாகும். எனவே, இதனை மனதில் கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் அரசாங்கம் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு நாட்டில் மக்களின் சுதந்திரமே அந்நாட்டின் நல்லாட்சிக்கான அடித்தளமாகும என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நல்லாட்சி பற்றி பேசும் மைத்திரிபால அரசாங்கம் ஸ்ரீ.சு.க. உறுப்பினர்களை சிறையிலடைக்கின்றது

(கொழும்பு)

நல்லாட்சி பற்றி பேசும் அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை சிறையில் அடைப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு அழுத்தங்கள் ,நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை கண்டிக்கின்றோம்.

அரசியல் ரீதியாக பழிவாங் [illegible] கப்பட்டுள்ள அனைத்து கட்சி உறுப்பினர்களுக்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குரல் கொடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதி அமைச்சர்கள், அரசியல்வாதிகளை அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சென்று பார்வையிட்ட போது அவர் இதை [illegible] தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போனேன். ஐந்து ரூபா பணத்தை எடுத்து ஒரு தினசரி பத்திரிகை தரும்படி கேட்டேன்.

அவர் உடனே அங்கே அடுக்கி வைத்திருந்த பத்திரிகைக் கட்டிலிருந்து ஒன்றை எடுத்து என் கையிலே கொடுத் தார். வாங்கிக் கொண்டேன். மீதிப்பணத்தையும் எடுத்து என் கையிலே கொடுக்காமல் எதிரிலே இருந்த பலகையிலே வைத்தார். அவரது கையிலே கொடுக்கவில்லை. எப்போ துமே இப்படியாகத்தான் செய்து கொள்வார். நானும் எடுத்துக் கொள்வேன்.

இவர் ஏன் இவ்வாறாக செய்கிறார் என்பது சந்தேகம். ஒருநாள் அவரிடமும் இதைக்கேட்டு விட்டேன்.

"நீங்கள் உங்கள் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குபவர்களுக்கு மிகுதிச் சில்லறை கொடுக்கும்போது பலகையிலே வைக்கின்றீர்கள்... கையிலே கொடுப்பதில்லை. ஏன் அப்படி?" என்று கேட்டேன்.

"பணத்தைக் கையிலே கொடுத்தால் நம்மிடமுள்ள இலட்சுமி போய்விடுவா" என்றார்.

அதாவது பணம் செலவாகிவிடும் என்பது அர்த்தமாகும்.

இன்னொரு நண்பர். அவர் ஒருநாள் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சோகமாக அமர்ந்திருந்தார்.

ஏன் இப்படிக் கப்பல் கவிழ்ந்தது போல அமர்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"கப்பல் கவிழ்ந்தால்கூட இப்படி கவலைப்படமாட்டேன் வேறொன்று நடந்து விட்டது" என்றார்.

"என்ன?" என்று கேட்டேன்.

" என் உச்சந்தலையிலே பல்லி ஒன்று விழுந்து விட்டது" என்றேன்.

" அதற்காகவா இப்படியாக ஒரு யோசனை?" என்று ஆச்சரியப்பட்டேன்.

" ஆமாம்... பல்லி உச்சந்தலையிலே விழுந்தால், பலன் என்ன என்று பஞ்சாங்கத்திலே பார்த்தேன். 'மரணம்' என்றுள்ளது. இவ்வாறு கூறிவிட்டு தொடர்ந்து யோசனையில் ஆழ்ந்தார்.

இப்படியும் ஒருவர் இருக்கிறார்.

எனது அலுவலகத்திலே வேலை பார்க்கும் சக நண்பர் அலுவலகத்தினுள் நுழையும்போது வலது காலை வைத் துத்தான் உள்நுழைவார்.

என்றாவது ஒருநாள் தவறுதலாக இடதுகாலை வைத்து உள்ளே வந்துவிட்டார் என்றால், அன்று முழுவதும் அவரது மனம் சங்கடப்பட்டுக் கொண்டேயிருக்கும். எந்த வேலை யையும் சரியாகச் செய்யமாட்டார்.

பூனை குறுக்காகப் போனால் சகுனம் சரியில்லையென்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருவர் எப்படித் தெரியுமா? அவர் வீட்டை விட்டு வெளியிலே புறப்படும்போது அயல்வீட்டில் உள்ள வானொலியில் "மியாவ்... மியாவ் பூனைக்குட்டி" என்று பாட்டுச் சத்தம் கேட்டால் கூட போதும் சகுனம் சரியில்லை என்று பிரயாணத்தை 'கான்சல்' செய்திடுவார்.

அளவுக்கு மீறிய சகுன நம்பிக்கைகள் இருக்கிறது. இதனுடன் பயமும் சேர்ந்து கொண்டால் எப்படியிருக்கும். வாழ்க்கையையே தடுமாற வைத்துவிடும். சிலர் காய் கறி வெட்டுவதற்கு கத்தியைக் கையிலே எடுக்கும்போது கூட நேரம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள் வார்கள். அப்படிப் பார்த்துத்தான் ஆரம்பிப்பார்கள்.

"அறிவு"தான் "மனதிற்கு" ஆசிரியராக இருக்கவேண்டும். அப்போதுதான் வாழ்க்கை எனும் படகில் நிம்மதியாக ஓட முடியும்.

அறிவு- மனம் சொல்வதைக் கேட்க ஆரம்பித்து விட்டால் இடைஞ்சல்தான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2015 - 12.02.2015



**தொட்ட காரியம் துரிதமாக நடைபெறும்! குறிக்கோளோடு வாழ்ந்து குடும்பப் பெருமையை உயர்த்த எண்ணும் துலாம் ராசி அன்பர்களே!**

## தொட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறும்




தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது 10 இல் உள்ள குரு, வக்ர இயக்கத்தில் இருப்பது யோகம்தான். அதே நேரத்தில் ஜென்ம சனியும் விலகி விட்டது. எனவே இனி உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்படும். உற்சாகத்தோடு பணிபுரியும் ஆற்றல்,' விட்டுப்போன வரன்கள் மீண்டும் வருதல், வீடு மாற்றங்களால நன்மை, உத்தியோக உயர்வு போன்றவை ஒவ்வொன்றாக நடைபெறும் நேரமிது.

சனி விலகியது என்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் பகை பாராட்டாமல் வந்து உதவி செய்வார்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும். எதிர்பாராத இடமாற்றம் வந்தாலும் அதை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளலாம். பொறுப்புகள் அதிகரித்தாலும் போதிய ஆதாயம் கிடைக்கும். வங்கி இருப்பு உயருமு.

புத-சுக்ர யோகம் செயற்படும் மாதமிது. சுக்ரன் ராசிநாதனாக மட்டுமல்லாமல் அஷ்டமாதிபதியாகவும் இருக்கிறார். புதன் 9 ஆம் இடத்திற்கு மட்டுமின்றி, 12 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். எனவே 8, 12 இற்கு அதிபதிகள் இணைந்து சஞ்சரிக்கும் இந்த மாதத்தில், திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

என்னயிருந்தாலும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொங்கு சனியாக இருப்பவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. முதல் சுற்றோ, 3 ஆவது அல்லது 4 ஆவது சுற்றோ நடப்பவர்கள், எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவதன் மூலம் தடைகள் அகலும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ரன் ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருக்கும் செவ்வாயோடு இணைவதால் இடம்,· பூமி வாங்கும் யோகம் உண்டாகும். லாபம் இருமடங்காகும். வரன் கைகூடி வராததால் கலைப்பட்டவர்கள், இப்பொழுது திருமணப் பேச்சு முடிவாவதற்கான அறிகுறிகள் தென்படுவது கண்டு ஆச்சரியப் படுவீர்கள். சகோதர ஒற்றுமை பலப்படும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28ஆம் திகதி புதன் தனுசு ராசியில் வக்ரம் பெறுகிறார். இக்காலத்தில் நன்மையும், தீமை யும் கலந்தே நடைபெறும். எதிர் பார்ப்புகள் நடைபெற்றாலும் இனம் புரியாத கவலைகள் மேலோங்கும்.

தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் மீண்டும் தலைதூக்கும். பிப்ரவரி 8 ஆம் திகதி மகரத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, வீடு கட் டும் முயற்சி அல்லது வாங் கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். கல்வி மற் றும் கலைத்துறை சம்பந்தமாக எடுத்த முடிவும் அனுகூலமாக அமையும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10 ஆம் திகதி மீன ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். 2, 7 இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும்பொழுது, எதிரிகளை நம்பி ஏமாறும் சூழ்நிலை உருவாகும். உதிரி வருமானங்கள் பெருகினாலும், உள்ளத்தில் அமைதி கிடைக்காது. உத்தியோகத்தில் உடனிருப்பவர்களால் உபத்திரவங்கள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு நீண்ட தூர மாறுதல் கிடைத்து நிம்மதி இழக்கச் செய்யும்.

இம்மாதம் அங்காரகனையும், முருகப்பெருமானையும் முறையாக வழிபட்டால் அல்லல்கள் தீர்ந்து ஆனந்தம் கூடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

பொருளாதார விருத்தி அதிகரிக்கும் வகையில், புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பகையான உறவினர்கள் நட்பாவார்கள். வீடு, இடம் வாங்கி குடியேறும் யோகம் உண்டு. 2-ல் சனி இருப்பதால், கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாமல் போகலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்ப சுமை கூடுதலாக இருக்கும்.

குழந்தைகள் உங்கள் குண மறிந்து நடந்து கொள்வர். புதனின் வக்ர காலத்தில் பொருளாதார நிலை உயரும். ஆபரண சேர்க்கை உண்டு. விநாயகர் வழிபாடு வெற்றியை வழாங்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**செவ்வாய் பலத்தால் செல்வநிலை உயரும்! நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும் என்று சொல்லும் விருச்சிக ராசி அன்பர்களே!**

## செவ்வாய் பலத்தால் செல்வநிலை உயரும்




தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சனி வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார். எனவே சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். வீடு வாங்கும் யோகம் முதல், வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பு வரை அடுக்கடுக்காக நல்ல பலன்கள் வந்து சேரும் மாதமிது.

வாக்கில் இனிமையும், வருபவர்களுக்கு நல்ல ஆலோசனைகளும் நீங்கள் சொல்வதால் புகழ் கூடும். பொருளாதார நிலை உயரும். குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிவதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து அனைத்துக் காரியங்களையும் முடித்துக் கொடுப்பார்கள். புத சுக்ர யோகம் இருப்பதால் புதிய வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும்.

தைரியகாரகன் செவ்வாய் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ராகு பலத் தால் வெளிநாட்டு முயற்சிகளில் கூட வெற்றி கிடைக்கும்.

சனி உங்களுக்குச் சகாய ஸ்தானாதிபதியாக இருப்பதால், ஏழரைச் சனியின் ஆதிக்க காலத்தில் ஏராளமான வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். தசாபுத்தி பலம் பெற்றவர்கள் புதிய வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும். சனி நற்பலன்களை வழங்க ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து, சனி பகவானுக்கு எள்தீபம் ஏற்றி சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது. பவுர்ணமி கிரிவலம் வருவதன் மூலம் பலன் கிட்டும். பயணங்களால் பலன் கிடைக்கும் விதத்தில் சனி சஞ்சரிக்கின்றார். அவரைக் குரு பார்ப்பதால் கனவுகள் நனவாகும். காரிய வெற்றி ஏற்படும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதி 4 இல் சஞ்சரிக்கின்றார். எனவே தாய்வழி ஆதரவு பெருகும். தக்க விதத்தில் வரன்கள் வந்து சேரும். இடம், பூமி வாங்குவதில் நாட்டம் செல்லும். எடுத்த காரியத்தை முடித்துக்கொடுக்க சகோதரர்கள் முன்வருவார்கள். அஞ்சல் வழியில் அனுகூலத் தகவல் வந்து சேரும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு சிலருக்கு கிடைக்கலாம். தொழில் சீராக நடைபெறும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது அதிக நற்பலன்கள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பெப்ரவரி 8 ஆம் திகதி மகரத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால், நற்பலன்களை காணப் போகிறீர்கள். லாபாதிபதியாகவும் விளங்கும் புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

**மீனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10 ஆம் திகதி மீன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நினைத்தது நடக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். புதிய தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பு உருவாகும். இம்மாதம் கதிரவன் வழிபாடு உங்கள் கனவுகளை நனவாக்கும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உங்களுக்கு இந்த மாதம் இனிய மாதமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டத்தில் உங்கள் பெயரும் இணைக்கப்படலாம். ஸ்திர சொத்துக்கள் வாங்குவதிலும், குழந்தைகளுக்கான ஆபரணங்களை வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும். வாங்கிய கடனைக்கொடுத்து மகிழ்வீர்கள். குரு வழிபாடு குதூகலம் வழங்கும். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவக்குறைப்பு வடக்கில் அவசியமே!

## முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா தெரிவிப்பு

மேலைத்தேய நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இப்போதும் உள்ளனர். இதுபோல வடக்கு, கிழக்கிலும் ஒருசில அரசியல்வாதிகள் இருக்கலாம். அதை பூரணமாக மறுக்க முடியாது. நிலைமையை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும்சரியாக கையாளப்படாவிடின் பயங்கரவாதம் அதன் கொடூரத்தை மீண்டும் தொடங்க முடியும் என்று முன்னாள் இராணுவ தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைக்க முடியுமென நான் நினைக்கின்றேன். எவ்வாறாயினும், யுத்தம் உச்சக்கட்டத்திலிருந்ததை விட இப்போது மிக குறைவாகவே அங்கு இராணுவம் உள்ளது. தேவையேற்படின் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வைத்துக்கொண்டு இராணுவ குறைப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நான் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை என்பதால் என்னால் நேரடியாக அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது. எனினும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான பல கட்சித் தலைவர்கள் உறுப்பினராகவுள்ள தேசிய நிறைவேற்று அதிகார பேரவையில அங்கத்தவராக உள்ளேன். விரைவில் வண.சோபித தேரரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் இந்த பேரவையில் சேரவுள்ளனர். வடக்கு, கிழக்கில் வாக்களிக்க செல்பவர்களை தடுக்கவென தேர்தலின்போது, மேலதிக படையினர் நகர்த்தப்படவில்லை.

ஆனால், வாக்களிப்பை தடுப்பதற்காக சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. தேர்தலுக்கு முன்னர், வடக்கு பாதுகாப்பு படைகளின் தளபதியை இடமாற்றம் செய்தனர். சில புலனாய்வு அதிகாரிகளுடன் சேர்ந்து திட்டங்களை வகுத்தனர். எம்மிடம் இது தொடர் பான விபரங்கள் உள்ளன. விரைவில் இவற்றை விசாரணைகளின் மூலம அம்பலப்படுத்துவேன்.

சில மாதங்களுக்கு முன்னர் சில தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டனர். முன்னிருந்த அரசாங்கத்தின் அக்கறையின்மையே இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் காரணம். நான் இராணுவத்தை விட்டு இளைப்பாறியதும் அவர்கள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இதன்மூலம் தப்பியிருந்த புலி உறுப்பினர்களை பிடித்திருக்கலாம். ஆனால், முன்னைய அரசாங்கம் இதை செய்யவில்லை.

உண்மையில் முன்னைய் அரசாங்கம், கே.பி, கருணா அம்மான், பிள்ளையான், எமில் காந்தன் ஆகிய புலித் தலைவர்களுக்கு செல்லம் கொடுத்திருந்தனர்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறினர். இவர்களை அரசாங்கம் தேவையான போது அரசியலுக்கு சாதகமாக பயன்படுத்தினர். வடக்கு, கிழக்கு மக்களை பயமுறுத்தவும் பயன்படுத்தினர். புலிகளுடன் சேர்ந்திருந்த புலம்பெயர்ந்தோருடன் தொடர்பு கொள்ளவும் இவர்களை தயக்கமின்றி பயன்படுத்தினர்.

இவ்வாறாக பயங்கரவாதிகளுடனும் அவர்களது ஆதரவாளர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தது முன்னைய அரசாங்கமேயன்றி நாம் அல்ல. நாம் இருக்கும்போது பயங்கரவாதிகள் ஒருபோதும் திரும்பி வரமாட்டார்கள்.

மேலைத்தேய நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் த்மிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இப்போதும் உள்ளனர். இதுபோல வடக்கு, கிழக்கிலும் ஒருசில அரசியல்வாதிகள் இருக்கலாம். அதை பூரணமாக மறுக்க முடியாது. நிலைமை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாவும் சரியாக கையாளப்படாவிடின் பயங்கரவாதம் அதன் கொடூரத்தை மீண்டும் தொடங்க முடியும். எனவே, அரசியல் தலைவர்களின் செயற்பாட்டிலேயே இந்த கேள்விக்கு பதிலுண்டு.

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைக்க முடியுமென நான் நினைக்கின்றேன். எவ்வாறாயினும், யுத்தம் உச்சக்கட்டத்திலிருந்ததை விட இப்போது மிக குறைவாகவே அங்கு இராணுவமுள்ளது.

தேவையேற்படின் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வைத்துக் கொண்டு இராணுவ குறைப்பை மேற கொள்ள வேண்டும். ஆனால், முன்னைய அரசாங்கம் அதை சரியாகதிட்டமிடவில்லை. சில இராணுவ தலைமைகள் பெரிதாக கதைப்பினும் ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. இது தான் இங்குள்ள பிரச்சினை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வடக்கு-கிழக்கு
# இணைப்புக்கு உதவ வேண்டுமேயன்றி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது

**(யாழ்ப்பாணம்)**

**உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை மீண்டும் இணைக்க வேண்டும் என விரும்புவோர் அதற்கு உதவ வேண்டுமே அன்றி முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்.**



கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் தேர்வில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை மிகவும் வருத்தத்துக்குரியதாகும். இத் தாமதத்தினால் மாகாணசபை ஊழியர்களுக்கும் அச்சபை பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சபையின் வரவுசெலவுத் திடடம்கூட நிறைவேற்றப்படாத நிலையில் நிலைமை இனபேதமாக மாறி ஒருதமிழரோ அல்லது இஸ்லாமியரோ மட்டும்தான் தெரிவாக வேண்டும் அல்லது தெரிவாக முடியுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் வேடிக்கையாதெனில் இச்சபை வடமாகாண சபையுடன் இணைக்கப்பட்டிருந்து உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய பிரிக்கப்பட்ட சபையாகும். இவ்விருசபைகளையும் மீண்டும் இணைக்க வேண்டுமென விரும்புவோர் அதற்கு உதவவேண்டுமே அன்றி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.

மேலிடத்தினர் எவரினதும் உதவியை நாடாமல் சம்பந்தப்பட்ட இரு சாராரும் ஓர் இணக்கப்பாட்டுக்குவரவேண்டும். ஓர் அரசியல் கட்சி முன் யோசனை எதுவுமின்றி தாம் இஷ்டப்பட்டவரை தெரிவு செய்யுமாறு ஜனாதிபதியை நாடியது அவருக்கு ஓர் சங்கடமான நிலைமையை உருவாக்கியது. அதில் தலையிடுவதில்லையென கூறி ஜனாதிபதி விலகிக்கொண்டமை ஆச்சரியப்படுவதற்கில்லை. சட்டத்தில் இடமின்மையால் ஜனாதிபதி இதில் தலையிட்டே இருக்க முடியாது.

தமிழத்தேசிய கூட்டமைப்பின் இந்தநடவடிக்கை பலரால் கேலிக்குரியதென விமர்சிக்கப்பட்டது.

மேலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவர் ஒருவர் ஆற்றிய உரையில் துவேசமும் இனவாதமும் தூண்டப்படுவதாக வெளிக் காட்டியது.

இந்த உரை எதிர்காலத்தில் இவ்விரு மாகாணங்களின் இணைப்பு சாத்தியமாகுமா என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

இதற்கு உடனடி பரிகாரமாக சபை உறுப்பினர்கள் தமக்கு விரும்பிய ஒருவரை இன,மத,பேதமின்றி தெரிவு செய்வதே. அவசியம் ஏற்படின் இரகசிய வாக்கெடுப்பு முறைமையையும் கையாளலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கோத்தபாயவுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக ரத்துபஸ்வெல மக்கள் நேற்று முன்தினம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தில் உயிர்களைப் பலிகொடுத்தும் நியாயமான தீர்வைப் பெற முடியாமல் போனதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சியனப் பிரதேச குடிநீர் பாதுகாப்பு மக்கள் எழுச்சி அமைப்பின் ஏற்பாட்டாளர் பரமித ஹெட்டியாராச்சி இது தொடர பாக கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்த நேரத்தில் கடமையில் இருந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர், அப்பொழுது கடமையில் இருந்த இராணுவத் தளபதி அல்லது பதில் இராணுவத் தளபதி ஆகியோரை உடன் அழைத்து விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். கடந்த அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து எமது மக்கள் திருப்திப்படப் போவதில்லை.

இது தொடர்பிலான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கும் நாம் முறைப்பாடொன்றை கையளித்துள்ளோம்.

எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட வேண்டும் என அரசாங்கத்துக்கு வலியுறுத்தியே இன்று மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார.

குடிநீர் கேட்டு வீதியில் இறங்கிப் போராடிய மக்கள் மீது மகிந்த அரசாங்கம் துப்பாக்கியால் பதில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி இசபெல்லா றுக்மணி

யாழ். கதிர்றல் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இசபெல்லா றுக்மணி கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி செல்லத்துரை சிவபாக்கியம்


யாழ். மீசாலை ஐயாகடையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவபாக்கியம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்துரை இராசதுரை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசதுரை (முன்னாள் தபால் அதிபர்) கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு St John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas Street East, Mississauga, ON L4Y 2B5, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பழனிவேல் ஆசாரி முருகப்பெருமாள்

மாத்தளையைப் பிறப்பிடமாகவும் நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிவேல் ஆசாரி முருகப்பெருமாள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தியாகராஜா சின்னத்தங்கச்சி

சங்கானை ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சின்னத்தங்கச்சி கடந்த 24 ஆம் திகதி சனிக் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10.00 மணிக்கு சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி செல்வரத்தினம் வேலாயுதம்பிள்ளை

வட்டு - வடக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த செல்வரத்தினம் வேலாயுதம்பிள்ளை கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக்கைதி படுகொலைக்கு கடும் கண்டனம்

பணயக் கைதி தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கு ஜப்பான் பிரதமர் ஷின்கோ அபே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மற்றொரு கைதியை உடனே விடுவிக்க வேணடும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.

ஜப்பானை சேர்ந்த பத்திரிகையாளர் கென்ஜி கோட்டூ, தனியார் பாதுகாப்பு நிறுவன ஒப்பந்தகாரர் ஹாருணா யுக் கவா என்னும் 2 பேரை சிரியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள்பணயக்கைதிகளாக பிடித்து வைத்தனர்.

3 நாளில் ஜப்பான் அரசு 200 மில்லியன் டொலர் (சுமார் ரூ.1,225 கோடி) தராவிட்டால், பிடித்து வைத்துள்ள பணயக்கைதிகள் 2 பேரையும் கொன்று விடுவோம் என ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் மிரட்டல் காணொலி வெளியிட்டனர். அவர்களை மீட்பதற்கான முயற்சிகளில் ஜப்பான் ஈடுபட்டது.

**கெடு முடிந்ததும் ஒருவர் படுகொலை**

இதற்கிடையே கெடு முடிந்த நிலையில், அவர்களை கொல்வதற்கு 'கவுன்ட் டவுன்' என்னும் இறங்குவரிசை ஏற்பாடுகள் தொடங்கி விட்டதாக தீவிரவாதிகள் அறிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் பணயக்கைதிகளில் ஒருவரான ஹாருணா யுக்கவாவை தலையைத் துண்டித்து படுகொலை செய்து, காணொலி வெளியிட்டு சர்வதேச நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளனர்.

**ஜப்பான் பிரதமர் கண்டனம்**

இந்த படுகொலைக்கு ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது,

காணொளி காட்சியில் இடம் பெற்றிருக்கிற, தலை துண்டிக்கப்பட்ட உடல், பணயக் கைதியாக பிடிக்கப்பட்ட ஹாருணா யுக்கவாவின் உடல்தான்.

இத்தகைய தீவிரவாத செயல், மூர்க்கத்தனமானது, ஏற்க முடியாதது. இத்தகைய செயல்கள், என்னை ஒன்றும் செய்து விட முடியாது.

மாறாக கோபத்தைத் தான் ஏற்படுத்தும். தீவிரவாதத்துக்கு ஜப்பான் அடிபணிந்து விடாது.

கென்ஜிக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோருகிறேன். அவரை விடுதலை செய்வதற்கு தன்னால் என்ன செய்ய முடியுமோ அத்தனையையும் ஜப்பான் செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**பெற்றோர் உருக்கம்**

தலை துண்டித்து கொல்லப்பட்ட ஹாருணா யுக்கவாவின் தந்தை ஷோயிச்சி, "நான் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளேன். இதுதான் கடைசியில் எனக்கு கிடைத்துள்ளது" என வேதனையுடன் கூறினார்.

தாயார் ஜுன்கோ இஷிடோ, "நிச்சயமாக ஒரு தாய் என்னும் வகையில் இது உண்மையாக இருந்து விடக்கூடாதா என்றுதான் நான் எண்ணினேன்" என உருக்கமுடன் கூறினார்.

**ஒபாமா கண்டனம்**

ஹாருணா யுக்கவா படுகொலைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அறிக்கையில் அவர், "ஜப்பான் பிரஜையான ஹாருணா யுக்கவாவை கொடூரமான முறையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத கும்பல் கொலை செய்திருப்பதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

நாங்கள் எங்கள் நேச நாடான ஜப்பானுடன் தோளோடு தோள் நிற்கிறோம். அந்த கொலைகாரர்களை நீதியின் முன் கொண்டு வந்து நிறுத்துவதற்கு நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்.

ஐ.எஸ் ஐ.எஸ்தீவிரவாதிகளை தோறகடிப்பதற்கு நாங்கள் உறுதியான நடவடிக்கை எடுப்போம்" என மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# பொருளாதாரத் தடையினால் ரஷ்யாவில் உணவு தட்டுப்பாடு

## குறைவாக சாப்பிடுமாறு அமைச்சர்கள் கோரிக்கை

உக்ரைன் விவகாரத்தால் ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. உணவு பொருட்களின் ஏற்றுமதியையும் நிறுத்தி வைத்துள்ளன. இதனால் ரஷ்யாவில் பொருளாதார பிரச்சினையும் அதன் எதிரொலியாக கடும் உணவு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதனால் உணவுப் பொருட்களின விலையும் உயர்ந்துள்ளது.

பொருளாதார தடை தொடர்பில் ரஷ்ய எம்.பி.க்களும், பழைமைவாதிகளும் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதில் ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்காகவும், ரஷ்யாவின் நலனுக்காகவும் மக்கள் குறைவாக உணவு சாப்பிடுங்கள்.

மேற்கத்தேய நாடுகளின் உணவு வகைகளை விடுத்து நிறைய பீ்ரூட சாப்பிடுங்கள், ரஷ்யாவில் தயாரிக்கப்படும் பருத்தி துணிகளை அணியுங்கள். மின்சாரத்தை குறைவாக பயன்படுத்துங்கள்.இது நமக்கு கடவுள் கொடுத்த சோதனையாக கருதுங்கள் என தெரிவித்துள்ளனர்.

ஆனால் மக்கள் அதை முழுமையாக ஏற்கவில்லை. புடின் அரசு மீது கோபமாக உள்ளனர் என அங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

# நைஜீரியாவில் கடும் மோதல்

## 200 பேர் பலி!

**(மைதுகுரி)**

**நைஜீரியாவில் மைதுகுரி நகரில் நேற்று முன்தினம் தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் இடம் பெற்ற கடும் மோதலில் 200 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ள அதேவேளை பல நூற்றுக்கணக்காணவர்கள் படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு போராடி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நைஜீரியாவில் வடகிழக்கு பகுதியில் போகோஹராம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். கிராமங்களில் புகுந்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களை பிணைக கைதிகளாக பிடித்து செல்கின்றனர். கொன்று குவித்தும் வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலைவேளை நைஜீரியாவின் பெரிய நகரங்களில் ஒன்றான மைதுகுரி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதை தொடர்ந்து இராணுவம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இரு தரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. போர் விமானங்கள் குண்டு வீச்சும் நடத்தின.

அச்சண்டையில் இரு தரப்பிலும் 200 பேர் பலியாகினர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். இதற்கிடையே இப்பகுதியில் உள்ள மங்குமனா நகரை தீவிரவாதிகள் கைப்பற்றினர். வருகிற பெப்ரவரி மாதம் நைஜீரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. அந்த தேர்தலை சுமுகமாக நடத்தவும், போகோஹாரம் தீவிரவாதிகளை ஒடுக்குவதிலும் அமெரிக்கா தீவிரமாக உள்ளது.

அதற்காக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி நைஜீரியா சென்றுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தீவிரவாதிகள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குர்திஷ் படையினரால் விஷவாயு தாக்குதல்!

## ஐ.எஸ்.ஐ.எஸ். குற்றச்சாட்டு

ஈராக் - சிரியா சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அவற்றை இஸ்லாமிய அரசாக அறிவித்துள்ளனர். தங்களுக்கு என நாணயம்,. பொலிஸ நிலையங்கள் என அமைத்து செயற பட்டு வருகின்றனர்.

ஈராக்கின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான மொசூல் நகரை கடந்த ஜுன் மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். நகரை மீட்க ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிராக ஈராக்கின் குர்திஷ் படையினர் போராடி வருகின்றனர்.

ஈராக்கில் இரண்டாவது மிகப் பெரிய நகரான மொசூலில் குர்திஷ் படையினர் ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு எதிராக விஷ வாயுவை பயன்படுத்தி அவர்களை கொன்று குவித்து வருவதாக ஐ.எஸ்.ஐ.எஸ்.குற்றம் சாட்டியுள்ளது.



இஸ்லாமிய அரசின் நைன்வா ஊடகம் மூலம் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.அதில் மதசார் பற்ற குர்திஷ் பெஷ்மர்கா படையினர் மொசூலில் அமெரிக்காவின் விஷவாயுவை பயன்படுத்தி முஸ்லிம்களை கொன்று குவித்து வருகிறார்கள்.இதில் அதிகமான பேர் காயம் அடைந்தும் உள்ளனர் என கூறப்பட்டு உள்ளது. (இ-5)

# பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் மரணம்

## இரங்கல் தெரிவிக்கச் சென்ற பிரதமர் விரட்டியடிப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலீதா ஜியா. இவரது இளைய மகன் அராபத் ரகுமான் கோகோ (வயது 44). மலேசியாவில் வசித்து வந்த இவர், நேற்று முன்தினம் திடீரென மாரடைப்பால் மரணம் அடைந்தார். இது குறித்த தகவல் அறிந்ததும், அரசியல் எதிரியின் மகன் என்பதை பொருட்படுத்தாமல் பிரதமர் ஷேக் ஹசீனா, டாக்காவில் உள்ள கலீதா ஜியாவின் வீட்டுக்கு துக்கம் விசாரிப்பதற்காக சென்றார்.

ஆனால் அவரை கலீதா ஜியா சந்திக்கவில்லை. அவர, மகனின் மரண செய்தியால் உடல்நிலை பாதித்து, மாத்திரை கொடுத்து தூங்க வைக்கப்பட்டுள்ளதாக தகவல் தரப்பட்டது. இதனால் பிரதமர் ஷேக் ஹசீனா ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது. இதுபற்றி கலீதா ஜியாவின பிரத்தியேக செயலாளர் ஷிமூல் பிஸ்வாஸ் கூறுகை யில், "மகனின் மரணம் குறித்த தகவல் அறிந்ததும் அவரது உடல் நிலை பாதிப் புக்குள்ளானது. அவருக்கு மருந்து கொடுக்கப்பட்டது. அவர் தூங்கச்சென்று விட்டார். பிரதமரை இன்னொரு நாள் வருமாறு கேட்டுக் கொணடோம்" என்றார்.

ஆனால் பிரதமர் ஷேக் ஹசீனாவை கலீதா ஜியா சந்திக்காதது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி ஷேக் ஹசீனாவின் தகவல் தொடர்பு ஆலோசகர் சோபன் சவுத்ரி, "பிரதமர் அனைத்து மரபுகளையும் மீறிதான் அங்கு சென்றார்.

பிரதமராக, ஒரு கட்சியின் தலைவராக, ஒரு தாயாக- மகனை இழந்த தாயை தேற்றுவதற்காக சென்றார். 5 நிமிடம் அங்கு நின்று கொண்டிருந்தார். ஆனால் அவர் உள்ளே நுழையவே அனுமதிக்கவில்லை" என மேலும் தெரிவித்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் பிரச்சினைகளை தெளிவுபடுத்த—

# சரியான தலைமை வேண்டும்

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

**தமிழர் முன்னேற்றக் கழகம், கடந்த 21ஆம் திகதி மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையுடன் தமிழ் மக்களின் கலை, கலாசார, அரசியல் மற்றும் வாழ்வாதார உரிமைகள் பற்றிய கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டிருந்தது.**



குறித்த கலந்துரையாடல் நிகழ்வில் தமிழர் முன்னேற்றக்கழகத்தினுடைய சமூக நலத் திட்டங்கள் மற்றும் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்பாக தமிழர் முன்னேற்றக் கழக பிரதான அமைப்பாளர் வி.ஜனகனினால் ஆயருக்கு தெளிவு படுத்தப்பட்டது. மேலும், இக் கலந்துரையாடலில் பிரதானமாக இரண்டு விடயங்கள் கலந்தாலோசிக்கப் பட்டன. முதலாவதாக போருக்குப் பின்னரான குறித்த 5 வருட காலப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம், மனோநிலை என்பன மீள் கட்டி எழுப்பப்பட வேண்டியதாகும். ஆனால் குறித்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நலத் திட்டங்களோ விழிப்புணர்வு நடவடிக்கைகளோ இதுவரையில் குறித்த மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தமிழர் முன்னேற்றக் கழகமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற போரினால் பாதிப்படைந்த பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு கைகொடுத்து வருகின்றது. தைப்பொங்கல் தினத்தன்று வெலிக்கடை -மகசின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்ததோடு, அவர்களின் விடுதலை தொடர்பாக பிரதான அரசியல் கட்சி தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் சந்திர ரத்தின பள்ளேகம உட்பட்ட முக்கியமான அலுவலர்களிடம், கைதிகளின் விடுதலை தொடர்பில் இரு கோரிக்கைகளை முன் வைத்திருந்தது.

தமிழர் முன்னேற்றக் கழகமானது குறித்த கைதிகள் தொடர்பாக எடுத்துள்ள, எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான ஒரு விசேட கையேடு ஒன்றும் ஆயரிடம் வி.ஜனகனினால் கையளிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் ஆயர் கருத்து தெரிவிக்கையில், குறித்த கைதிகளின் விடுதலை தொடர்பில் தான் பகிரங்கமாக குரல் கொடுத்ததாகவும், தொடர்ச்சியாக தான் அதனைச் செய்யவுள்ளதாகவும், தன்னாலான பாரிய பங்களிப்பு தமிழர் முன்னேற்றக் கழகத்தின் செயற்பாடுகளில் இருக்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

அத்தோடு தமிழர்களுக்கான உரிமைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ள அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய அமைப்பொன்று காலத்தின் தேவையாகவுள்ளது. குறித்த மக்களின் பிரச்சினை, தேவைகள் தொடர்பாக ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்களிடமும் அரசாங்கத்திடமும் சர்வதேச அரங்கில் வேறு மொழி பேசும் மக்களிடமோ குறித்த விடயங்களை சரியாகத் தெளிவுபடுத்த சரியான தலைவரொருவர் குறித்த மக்களுக்கு இல்லாதிருப்பதாகவும் தன்னுடைய ஆதங்கத்தினையும், அப்படியானதொரு தலைவர் காலத்தின் தேவையெனவும் ஆயர் தமிழர் முன்னேற்றக்கழக பிரதான அமைப்பாளரிடம் தெரிவித்திருந்தார்.

குறித்த சந்திப்பில் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருக்கும் மக்களுக்கும் இடையில் சந்திப்புகளை மேற்கொண்டு தெளிவுபடுத்தவுள்ளதோடு, தமிழர் முன்னேற்றக் கழகத்தின் அனைத்து சமூக நலசெயற்பாடுகளுக்கும் தனது ஒத்துழைப்பினையும் ஆசீர்வாதத்தினை யும் வழங்குவதாகவும் ஆயர் தெரிவித்திருந்தார். (அ-2)

## குழந்தை பாடல்கள் இறுவெட்டு வெளியீடு

கரைச்சி பிரதேச பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் கிராமிய பாடல்கள், குழந்தைப் பாடல்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

குழந்தைப் பாடல்களை கவிஞர் வளவை வளவனும் கிராமிய பாடல்களை கவிஞர்களான பொன். காந்தன், ஞானச்சந்திரன், கோணேஸ், லிங்கேஸ், எஸ்.பி. ரூபன் ஆகியோர் எழுதியுள்ளனர். இறுவெட்டை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைப்பார். (அ-2-277)

## சட்டமாணி நுழைவுப் பரீட்சை கருத்தரங்கு வவுனியாவில்

(வவுனியா)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய கல்வியாண்டிற்கான சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப்பரீட்சை நாடளாவிய ரீதியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி திறந்த பல்கலைக்கழக பிராந்தியக் கற்கை நிலைய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் தமிழ்மொழி மூல மாணவர்களின் நலன் கருதி கொழும்பு , கண்டி நகரங்களில் நடத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்குத் தொடரின் இறுதிக் கருத்தரங்கு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இலக்கம் 103, மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியில் அமையப் பெற்றுள்ள கல்விநிலையத்தில்நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் நுழைவுப் பரீட்சை தொடர்பான வழிகாட்டல்களைப் பெற விரும்புவோர் 071 819 9787, 077 074 6588 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட அலுவலரும் விரிவுரையாளருமான சட்டத்தரணி எஸ்.எம். சப்ரிகேட்டுக்கொண்டுள்ளார். (அ)




## பூநகரி பிரதேச செயலகத்தின் படைப்பிலக்கிய வெளியீடுகள்

(பூநகரி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் படைப்பிலக்கிய வெளியீடுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வலிகளின் பொறி கவிதைத் தொகுதிக்கான வெளியீட்டுரையை கவிஞர் இ.த.ஜெயசீலனும் அறியாமலே குறும்படத்திற்கான வெளியீட்டுரையை நெடுந்தீவு முகிலனும் பூநகரி பிரதேச கூத்துக்கலை காவலர்கள் எனும் ஆய்வுக் கட்டுரைக்கான வெளியீட்டுரையை கிளி நொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பப்பிள்ளை விருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விந்தனும் ஆற்றவுள்ளனர். (இ-5)

## மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்வு காண்பிக்கப்பட்டது

(கனகபுரம்)

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கனகபுரம் நோக்கி செல்லும் பிரதான பாதையில் யமஹா நிறுவனத்தினரால் மோட்டார் சைக்கிள் சாகசம் நேற்றைய தினம் காண்பிக்கப்பட்டது.

இச்சாகச நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியிலிருந்து 9.30 வரையில் குறித்தவீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக்கு முன்பாகவும் தனியார் பேருந்து தரிப்பிடம் மற்றும் முச்சக்கரவண்டி தரிப்பிடம் முன்பாகவும் நடத்தப்பட்டது.

சுமார் 4 மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் இச்சாகச நிகழ்வு நடத்தப்பட்டது.

இவ்விடங்களில் மக்கள் ஒன்று கூடி வேடிக்கைக் பார்த்த நிலையில் சில மணிநேரம் வீதிப் போக்குவரத்து தடை ஏற்பட்டதுடன் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

வாகன நெரிசலை வீதி போக்குவரத்துப் பொலிஸார் கட்டுப்படுத்தியிருந்தனர். (அ-2-271-259)

## இராணுவ பிரசன்னம் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிடுவேன்

### சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

நாட்டில் சர்வாதிகார அரசாங்கத்தை அகற்றி மக்களுக்கு நல்லாட்சியையும் மாற்றத்தையும் கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிவருகின்ற நிலையில் வடக்கு, கிழக்குதமிழர்வாழும் பகுதிகளில்இன்னமும் இராணுவத்தினரின் தலையீடுகளும் நெருக்குவாரங்களும் இம்மியளவும் குறைந்ததாக தெரியவில்லை. ரோந்துகளும் புலானாய்வு துறையினரின் மோப்பங்களும் தொடர்கின்றன.

இதன்மூலம் இந்த நாட்டிலும் தமிழ் மக்கள் வாழ்விலும் நம்பிக்கை வருமென நம்பி வாக்களித்த மக்களின் மனதில் அச்சமும் நம்பிக்கையின்மையுமே ஏற்பட்டு வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நேற்று முன்தினம் சாஜி முன்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உருத்திரபுரத்தின் எம் எதிர்கால சந்ததி சிறந்த முறையில் நல்லதொரு கல்விச் சூழலில் கல்வி கற்பதற்கு ஒரு அழகான முன்பள்ளியொன்றை யு.என்.ஹபிட்ரற் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

ஒரு முன்பள்ளி நிகழ்வில் இராணுவச் சீருடை பிரசன்னம் எமது மக்களையும் எமது எதிர்கால சந்ததிகளையும் ஒரு அடிமைத்தனத்துக்குள் வைத்திருப்பதையே ஆக்கிரமிப்பாளர்கள் விரும்புவதான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இராணுவ பிரசன்னம் எமது பிள்ளைகளின் உளவியலில் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நாட்டினுடைய ஜனாதிபதி நல்லாட்சியை ஏற்படுத்துவதாக சொல்கிறார். முயற்சிக்கிறார். ஆனால் இங்கு இராணுவமோ பழைய மாதிரியே செயற்பட நினைக்கின்றது.

எனவே இது தொடர்பாக நான் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்த இருக்கின்றேன். எமது பிள்ளைகளின் கல்லறைகளின் மீது இராணுவம் ஏறி மிதித்து அசிங்கம் செய்யும் வரை இராணுவம் எமது நண்பர்களாக முடியாது. நாம் கடந்த எட்டாம் திகதி தெளிவாக வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆக்கியது நாம் தொடர்ந்தும் அடிமை வாழ்வுக்குள் வாழ்வதற்கு அல்ல.

எனவே இந்தச் செய்தி இராணுவ மற்றும் அரசாங்க மேலிடங்களுக்கு சென்றுச் சேர வேண்டும் என தெரிவித்தார். (அ-2)

## 30 இலட்சம் ரூ. செலவில் முன்பள்ளி அமைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மலையாளபுரத்தில் புலம்பெயர் தமிழர் ஒருவரால் இலவசமாக இயக்கப்படும் எஸ்.கே. முதியோர் இல்லத்தின் மற்றுமோர் சேவையாக கடந்த தைப்பொங்கல் தினத்தன்று மலையாளபுரத்திலுள்ள கற்பக முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் 30இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளி கட்டடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஆலயங்கள் ஊடாக அடிப்படை கல்விக்கு அத்திவாரம் இடப்பட வேண்டும் என்ற நோக்கில் 30 இலட்சம் ரூபா செலவில் கட்டடமொன்று அமைக்கப்பட்டு சிறார்களுக்குரிய தளபாட வசதிகள், கணனி தொழில்நுட்ப வசதிகள் , காலை பால், மதியம் உணவு என்பவற்றுடன் 30 சிறார்களுக்கு புத்தகப் பைகளுடனான கற்றல் உபகரணங்களும் சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சிறார்களுக்கான கல்வி போதிக்கப்படுகின்றது. இவ்வாசிரியர்களுக்கான கொடுப் பனவு எஸ்.கே.முதியோர் இல்லத்தினூடாக வழங்கப்படுகின்றது. (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதங்களின்றி சட்டம் இயற்றுவது அதிக பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடும்

## ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி விசேட உரை

(புதுடில்லி)

தேவையான ஆலோசனைகள் மற்றும் விவாதங்கள் இன்றி சட்டங்களை நிறைவேற்றுவது பாராளுமன்றத்தின் பங்களிப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய குடியரசு தின விழா உரையில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

66ஆவது குடியரசு தின விழா கொண்டாட்டத்தையொட்டி நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினமிரவு தொலைக் காட்சி மூலம் ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி உரையாற்றினார்.

அதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டு மக்கள் நிலையான ஒரு ஆட்சி அமைய வேண்டும் என்ற நோக்கில் ஒரு அணிக்கு பெருவாரியான வாக்குகளை அளித்து அந்த அணியில் இருந்து பெருவாரியானவர்களை தேர்ந்தெடுத்துள்ளனர்.

நாட்டு மக்களின் இந்த நடவடிக்கையானது இந்த நாட்டின் ஆட்சியை கூட்டணி ஆட்சியின் நிர்ப்பந்தங்களில் இருந்து விடுதலை அளித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அணியானது இந்த நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் செயற்படுவதற்கு இந்த தேர்தல் உதவி இருக்கிறது.

வாக்காளர்கள் தங்கள் கடமையை செவ்வனே செய்து முடித்து விட்டார்கள்.

இப்போது வாக்காளர்கள் தங்கள் மீது வைத்த நம்பிக்கையை செயற்படுத்துவது பெரும்பான்மையில் வெற்றி பெற்ற ஆட்சியாளர்களின் கடமையாகும்.

தேவையான ஆலோசனைகள் மற்றும் விவாதங்கள் இன்றி சட்டங்களை நிறைவேற்றுவது பாராளுமன்றத்தின் பங்களிப்பில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதனால் மக்க ளுக்கு அமைப்பின் மீது உள்ள நம்பிக்கை சிதறுகிறது. இது அரசியல் நடைமுறைகளுக்கும் சட்டங்களை இயற்றும் அமைப்புக்கும் உகந்தது அல்ல.

பாலியல் வன்முறைகள், கொலைகள், வீதிகளில் பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுதல், கடத்தல் மற்றும் வரதட்சணை தொடர்பான மரணங்கள் ஆகியவை பெண்களை அவர்களின் சொந்த வீடுகளுக்கு உள்ளேயே அச்சத்துடன் வாழவேண்டிய அவலநிலையில் தள்ளியிருக்கிறது.

பயங்கரவாதமும் வன்முறையும் நம்முடைய நாட்டின் எல்லையின் மறுபக்கத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய நாட்டு மக்களுக்கு எதிரான சக்திகளை வேரறுக்கும் வலிமையும் உறுதியும் நம்மிடம் உள்ளது.

இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள தீவிரவாதத்தை அண்டைநாடுகள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பயங்க ரவாதத்துக்கு எதிரான நம்முடைய போருக்கு உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவுடன் தோள் கொடுத்து துணை நிற்கவேண்டும்.

இந்திய மக்களின் வாழ்க்கையை முறையை மேம்படுத்தும் விருப்பும் பொறுப்பும் நமக்கு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அசாமில் 2 இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு




இந்திய நாட்டின் 66ஆவது குடியரசு தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. இந்நிலையில், அசாம் மாநிலத்தில் டின்சுக்யா மாவட்டத்தில் டிக்போயி நகரில் தொடர்ச்சியாக 2 குண்டுகள் வெடித்தன.

முதலில் ரயில் தண்டவாளம் அருகே உள்ள குப்பை கிடங்கில் புதைத்து வைத்திருந்த குண்டு வெடித்தது. சிறிது நேரம் கழித்து குப்பை கிடங்கின் அடியில் உள்ள சாக்கடையில் குண்டு வெடித்தது. இந்த 2 குண்டுகளும் குறைந்த சக்தி திறன் கொண்டவையாக இருந்தன.

மேலும், இந்த 2 குண்டுகளும் நாட்டு வெடிகுண்டுகள் என்பதால் பெரிய அளவில் எந்தவித பாதிப்பையும்ஏற்படுத்தவில்லை. இந்தசம பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

அணிவகுப்பு மரியாதையின் போது

## கவனத்தை ஈர்த்த பெண் அதிகாரி



குடியரசுத் தலைவர் மாளிகை முன்பு, விமானப்படையின் அணி தளபதி பூஜா தாக்கூர் தலைமையில் ஒபாமாவுக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதன் மூலம் முப்படை அணிவகுப்பு மரியாதைக்கு தலைமை வகித்த முதல் பெண் அதிகாரி என்ற சிறப்பை பூஜா தாக்கூர் பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு குடியரசு தின விழாவின் கருப்பொருளான 'பெண்களின் சக்தி' அமைந்துள்ள நிலையில் அதை வெளிப்படுத்துவதாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

இதுகுறித்து பூஜா தாக்கூர் கூறும்போது, "உலகின் மிக சக்தி வாய்ந்த மனிதருக்கு மரியாதை அளிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டதன் மூலம் நான் வரலாறு படைத்துள்ளேன் என்பதை நினை த்து மிகுந்த பெருமை அடைகி றேன்" என்றார்.

குஜராத் முதல்வர் ஆனந்தி பென்படேல் தனது டுவிட்டர் பக்கத்தில்,

"அமெரிக்க ஜனாதிபதிக்கு பெண் அதிகாரி தலைமையில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டதை அறிந்து, பெண் என்ற முறையில் மிகவும் பெருமிதம் அடைந்தேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## விமர்சனத்துக்குள்ளான ஜனாதிபதி பராக் ஒபாமா

இராணுவ அணிவகுப்பின் போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சூயிங்கம் மென்று கொண்டிருந்தது சமூக வலைத்தளங்களில் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

66ஆவது குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் அவரது மனைவியும் கலந்து கொண்டுள்ளனர்.

தேசியைக் கொடியை பிரணாப் முகர்ஜி ஏற்றிவைத்த பிறகு இராணுவ அணிவகுப்பு, கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்திய இராணுவத்தின் பலத்தை பறைசாற்றும் வகையில் டேங்கர்களும், ஹெலிகொப்டர்கள் ஏனைய போர் இயந்திரங்களின் அணிவகுப்பு நடந்தபோது, பிரதமர் நரேந்திர மோடி அருகே அமர்ந்திருந்த ஒபாமா சூயிங்கம் மென்று கொண்டிருந்தார்.

அவர் கையில் எடுத்துவிட்டு திரும்பவும் வாயில் இட்டுக் கொண்டது சமூக வலைத் தளங்களில் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இது குறித்து எழுத்தாளர் ஷோபா டே தனது டுவிட்டரில், (@DeShobhaa) "சகோதரர் பராக் தனது தாடைக்கு ஓவர்டைம் வேலை கொடுத்துள்ளார். நல்ல வேளை அது குட்காவாக இல்லை.

இருந்தாலும் ஒரு மிகப்பெரிய அணிவகுப்பின்போதும் சுவைக்க வேண்டுமா? என குறிப்பிட்டுள்ளார். (இ-5)

## 66-வது குடியரசு தின விழாவில் முதல் முறை சுவாரஸ்யங்கள்

நாட்டின் 66-வது குடியரசு தின விழாவில் முதல் முறையாக சில சுவாரஸ்ய சம்பவங்கள் நடந்துள்ளன.

1. முதல் முறையாக இராணுவம், கடற்படை, விமானப்படை என முப்படையைச் சேர்ந்த வீராங்கனைகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த அணி வகுப்புக்கு சென்னையைச் சேர்ந்த திவ்யா அஜித் தலைமை தாங்கினார். முன்னதாக அவர் கூறுகையில்,

அனைவரும் சமம். யாருக்கும் நாங்கள் குறைந்தவர்கள் இல்லை. இராணுவ தினத்தன்றும் வீராங்கனைகள் கலந்து கொண்ட அணிவகுப்பு நடைபெற்றது. இதே போல் குடியரசு தின விழாவில் இந்த ஆண்டு முதல் முறையாக அனைத்து மகளிர் அணிவகுப்பு நடந்துள்ளது. போர்க்களத்திலும் முன்நின்று போரிட விரும்புகிறோம் என்றார்.

2. இந்திய குடியரசு தின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.

3. வழக்கத்துக்கு மாறாக இந்தியக் குடியரசுத் தலைவரும், குடியரசு தின விழா சிறப்பு விருந்தினரும் தனித் தனி வாகனத்தில் வந்தனர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது பீஸ்ட் வாகனத்தில் வந்தார்.

4. நக்சல் தடுப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் (கோப்ரா) படைப் பிரிவினர் குடியரசு தின விழாவில் பங்கேற்றனர்.

5. அதிக தூரம் சென்று தாக்கக் கூடிய மிக்-29 ரக போர் விமானம் முதல் முறையாக குடியரசு தின விழா அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டது. (இ-5)

## குஜராத் பாரம்பரிய தலைப்பாகை அணிந்து குடியரசு தின நிகழ்வில் கலக்கினார் பிரதமர்



பிரதமர் மோடி பொது நிகழ்ச்சிகளில் வித்தியாசமான உடை அணிந்து அனைவரது கவனததை ஈர்ப்பது வழக்கம். நேற்று முன்தினம் காவி கலரில் குர்தா பைஜா, தோளில் சிவப்பு துண்டு அணிந்து ஒபா மாவை வரவேற்றார். பின்னர் கோட் சூட் அணிந்து ஒபாமாவுடன் கலக்கினார். நேற்று அவர் குஜராத் மாநில பாரம்பரியப்படி கதர் தலைப்பாகை அணிந்து வந்தார். ராஜ பாதை வந்து இறங்கிய ஒபாமாவை அதே தலைப்பாகையுடன் சென்று மோடி வரவேற்றார். அவரைப் பார்த்ததும் ஒபாமா உற்சாகம் அடைந்தவராக காணப்பட்டார்.

மோடியுடன் சிரித்து சிரித்து பேசிக் கொண்டே இருந்தார். நீண்ட நாட்கள் நெருங்கி பழகிய நண்பர்கள் போல் ஒபாமாவும் மோடியும் காணப்பட்டனர். ஒபாமாவின் எளிமையும், பழகும் விதமும் இந்திய மக்களை மிகவும் கவர்ந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காவடி எடுத்த மகிந்தவுக்கு கோவணம் கட்டிய சீனா

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார். அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியொருவர் இந்தியாவுக்கு வருகை தந்திருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக நெருக்கமான உறவைப் பேணிக் கொண்டிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்ட கையோடு அவர் அமெரிக்காவுக்கும் விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நரேந்திர மோடிக்கு அமெரிக்க மக்கள் அளித்த வரவேற்பு உலகம் முழுவதையும் வியக்க வைத்தது.

அதேநேரம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் உடனடியாகவே இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். இந்திய விஜயத்தின் போது பிரதமர் மோடி, ஒபாமாவை ஆரத்தழுவி வரவேற்றதற்குள் நிறைந்த செய்திகள் உலகத்திற்கு தெரியப்படுத்தப்படுகின்றன.

இவை பொதுவான கருத்து. ஆனால் இவற்றைக் கடந்து, ஓர் உண்மையையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

அதாவது அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடந்த போது, பராக் ஒபாமாவுக்கு அமெரிக்க வாழ் தமிழர்கள் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒபாமா வரவேண்டும் என்ற உள்ளார்ந்தமான பிரார்த்தனை ஈழத்தமிழர்களிடமும் இருந்ததை மறுதலிக்க முடியாது. இந்நிலையில் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியானார்.

இதேபோல் இந்தியப் பொதுத் தேர்தல் நடந்தபோது, சோனியா தலைமையிலான காங்கிரஸ் மண் கௌவ வேண்டும் என்பது ஈழத்தமிழர்களின் பெருவிருப்பமாக இருந்ததுடன் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி வெற்றியீட்ட வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஈழத்தமிழர்களின் ஆசை இந்தியாவிலும் நிறைவேறிற்று.

இதற்கு முன்னதாக வன்னிப் போர் இடம்பெற்ற போது தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி மிகப்பெரும் நாடகம் நடித்தார். எங்களுக்கு உதவுவது போல அவர் நடித்த உண்ணா விரதப் போராட்டம் கலைஞர் கருணாநிதி மிகப்பெரிய மோசடிக் காரர் என்ற உண்மையை உலகத் தமிழ் நெஞ்சம் எங்கும் பதியச் செய்தது.

இவ்விடத்தில் இறைவா! கருணாநிதியை ஆட்சியில் இருந்து இறக்கு என்று ஈழத்தமிழினம் மன்றாடிக் கொள்ள, செல்வி ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வரானார். ஜெயலலிதா முதல்வரானதும் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களை சட்ட சபையில் நிறைவேற்றினார்.

இவற்றோடு, இலங்கையில் கடந்த ஜனவரி 8ந் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை தமிழர்கள் ஆதரித்தனர். உலகம் அதிசயிக்கும் அளவில் வெற்றி கிடைத்தது.

ஆக, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா; இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி; தமிழக முதல்வர் ஜெயலலிதா; இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்றவாறு ஈழத்தமிழர்களின் பிரார்த்தனையும் விருப்பமும் நிறைவேறியமை அதிசயமான உண்மை.

இந்த உண்மை; நிச்சயம் ஆச்சரியமான முடிவுகளை எமக்குத் தரும் என நம்பலாம். அதன் ஒரு கட்டமாக ஒபாமா இந்தியாவுக்கு வருகை தந்து மோடியைச் சந்தித்துச் செல்ல, இலங்கை ஜனாதிபதி மைத்திரி விரைவில் இந்தியாவுக்குச் சென்று மோடியைச் சந்திப்பார்.

இந்தச் சந்திப்புகள் அனைத்தும் காவடி எடுத்த மகிந்தவுக்கு, கோவணம் கட்டி விட்ட சீனாவின் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றியது போல இருக்கும். எங்கள் இன அழிப்போடு இலங்கைக்குள் இடம்பிடித்த சீனா; அமெரிக்க–இந்திய உறவை நெருக்கமடையச் செய்ததன் மூலம், இயற்கையான தனது கட்டை மூக்கை மேலும் அறுத்துக் கொண்டது.

# நீதித்துறையின் கௌரவத்தை நீதியரசர் பாதுகாக்க வேண்டும்

## நீதிச் சேவைகள் சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தினத்தில் அலரி மாளிகையில் இருந்ததாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஒத்துக்கொண்டமை குறித்து ஆச்சரியமடைவதாக நீதி சேவைகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மொஹான் பீரிஸ், பிரதம நீதியரசர் என்ற பதவியின் கௌரவம் மற்றும் அதன் உயரிய பண்புகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

நீதி சேவைகள் சங்கத்தில் நீதவான் மற்றும் மாவட்ட நீதிபதிகள் அங்கம் வகித்து வருகின்றனர்.

கடந்த 8 ஆம் திகதி தேர்தல் முடிவுகளை புறந்தள்ளி விட்டு முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியை தொடர்வது குறித்து அலரி மாளிகையில் நடத்தப்பட்டதாக கூறப்படும் பேச்சுவார்த்தையில் பிரதம நீதியரசர் கலந்து கொண்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களததில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் குறித்து நீதி சேவைகள் சங்கம் கடும் அதிருப்தியை வெளியிடுவது என சங்கத்தின் நிறைவேற்று சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

குற்றத்துடன் சம்பந்தப்பட்டமை தொடர்பான வாய்ப்புகள் எதுவாக இருந்தாலும் அலரி மாளிகையில் நடந்ததாக கூறப்படும் சதித்திட்டத்தின் போது பிரதம நீதியரசர் அங்கிருந்தமை தொடர்பில் சங்கம் ஆச்சரியமடைவதாகவும் அப்படியான முக்கியமான பிரச்சினைகளின் போது நீதித்துறை பக்கசார்பின்றி செயற்படுவது முக்கியமானது எனவும் கூறியுள்ளார்.

அப்படியான சந்தர்ப்பங்களில் அரசியல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் தீர்மானங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும் என சங்கம் வலியுறுத்துவதாக அதன் செயலாளர் ரங்க திஸாநாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதியால் ஆபத்தா!

## ரணில் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது, எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதிப்பாக அமையாதென கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் என எவரும் சந்தேகம் கொள்ள தேவையில்லை. அப்படியான எந்த பிரச்சினையும் ஏற்படாது. இது புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கி செல்லும் பாதையை ஏற்படுத்திய விடயம் மாத்திரமே எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மொரவக்க பொருப்பிட்டிய நிசல உயன பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருக்கும் போதே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

நான் அவருக்கு எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை. சுதந்திரக் கட்சியில் இருந்து விலகுமாறும் கூறவில்லை.

அவர் கட்சியில் இருந்து சட்ட விரோதமாக நீக்கப்பட்டார். தேர்தலில் நாங்கள் வெற்றியடைந்த பின்னர் சுதந்திரக் கட்சியில் புரட்சி ஒன்று ஏற்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதிக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி வழங்கப்பட்டது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மகிந்தானந்த வெளிநாடு செல்லத்தடை

(கொழும்பு)

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் கடவுச்சீட்டு மூன்று மாத காலத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் முடியும் வரை வெளிநாடு செல்ல முடியாதபடி அவரது கடவுச்சீட்டு இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோர் வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டது. (எ-11)

# அதிபர்கள் செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு நாளை புதன்கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## துணுக்காய் பிரதேச சபைக்கு

# முல்லை.மாவட்ட நீதிமன்றினால் 85இலட்சம் ரூபா வழங்கப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் துணுக்காய் பிரதேச சபைக்கு இரு தடவைகளில் 85 இலட்சம் ரூபா பணம் துணுக்காய் பிரதேச மக்களின் பொதுநல வேலைத் திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்களின் குற்றச் செயல்கள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்ற போது அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட குற்றப் பணத்தின் ஒரு பகுதியே இவ்வாறு மீளவும் அப்பிரதேச மக்களின் பொதுநலப் பணிகளுக்காக நீதிமன்றத்தால் துணுக்காய் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.


இது கடந்த வருடத்தில் இரு தடவைகள் முறையே 40 இலட்சம் மற்றும் 45 இலட்சம் என வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் இப்பணத்தில் இருந்து பிரதேச மக்களின் கிராம வீதிகள், தெருமின் விளக்குகள்,கிராமிய வாசிகசாலைகள் உட்பட் பிரதான வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாது இருப்பதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை இப்பணத்திலிருந்து 20 இலட்சம் ரூபா மல்லாவியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொதுச்சந்தைக்கு வர்ணம் பூசுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தை அமைப்புக்குரிய செலவுகளுக்கு அரசாங்கத்தினால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஏன் பொதுமக்களின் பொதுநலப்பணிகளுக்காக நீதிமன்றம் வழங்கிய பணத்தில் செலவு செய்ய வேண்டுமென்ற கேள்வியையும் குறித்த பிரதேச மக்கள் எழுப்பியுள்ளனர். (அ-2,15)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பணம் மட்டுமே வாழ்வல்ல!



❖ செல்வம் பெருகியுள்ள காலத்தில்தான் ஒருவனுக்கு பணிவு தேவை. அதே சமயம் வறுமையுற்ற காலத்தில் மனிதனுக்கு துணிவு அவசியம்.

❖ தன்னந்தனியாக இருப்பவன் பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் பித்துப் பிடித்தவனைப் போல அலைய நேரிடும்.

❖ துன்பமற்ற இன்பமும், தீமையற்ற நன்மையும் அடைவது என்பது இயலாத ஒன்று. எந்தச் செயலிலும் இன்ப, துன்பம் இரண்டும் கலந்தே இருக்கிறது.

❖ நன்மை செய்பவன், ஒவ்வொருவருக்கும் கைகொடுத்து மகிழத் தயாராயிருக்கலாம்.

❖ பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. பணத்தை தவிர, நாம் பிறருக்குச் செய்யும் நன்மையும், தெய்வபக்தியும் நம் மனதில் ஆற்றலை பெருகச் செய்பவை தான்.

❖ மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது.

❖ அரிய செயல்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லர் கன்னிச் சதம்

# ஒன்பது வருடங்களின் பின்னர் தெ.ஆபிரிக்காவை வென்றது கரீபியன்




தென்னாபிரிக்கா - மேற்கிந்திய அணிகளுக்கிடையில் போர்ட் எலிசபெத்தில் இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்திய அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க அணிக்கெதிராக 9 வருடங்களின் பின்னர் பெற்ற வெற்றி இதுவென்பது சிறப்பானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடும்படி தென்னாபிரிக்காவைப் பணித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டேவிட் மில்லர், 133 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 130 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டார். மேற்கிந்திய அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் ஜசன் ஹோலடர் 4 விக்கெட்டுகளையும் ஷெல்டன் கொட்ரல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணியின் ஆரம்ப விக்கெட்டுகள் குறைந்த ஓட்டங்களுடன் சரிந்த போதிலும் இடைநிலை வீரர்களின் நிதானமான துடுப்பாட்டம் காரணமாக 48.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து, வெற்றி இலக்கை அடைந்தது (266 ஓட்டங்கள்). மார்லன் சாமுவெல் 68 ஓட்டங்களுடனும் டரென் சமி 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நிதானமாக, தனிமனிதனாக துடுப்பெடுத்தாடிய அன்ரே ரஸ்ஸல், ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களைப் பெற்றார். இதில், 5 ஆறு ஓட்டங்களும் 5 நான்கு ஓட்டங்களும் உள்ளடங்கும்.



தென்னாபிரிக்க அணி சார்பில் போல் டுமினி, பர்ஹான் பிஹார்டீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக அன்ரே ரஸ்ஸல் தெரிவு செய்யப்பட்டார். குறித்த வெற்றியின் மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரின் நிலை 3:1 என்ற ரீதியில் தென்னாபிரிக்கா வசமிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் காலிறுதியில் ரபேல் நடால்



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டெனிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) தகுதி பெற்றார். நான் காவது சுற்றில் தென் ஆபிரிக்காவின் கெவின் ஆண்டர்சனுடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 7:5, 6:1, 6:4 எனற நேர் செட்களில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 4வது சுற்றில், உள்ளூர் வீரர் நிக் கிர்ஜியாஸ் (19 வயது) 5:7, 4:6, 6:3, 7:6 (7:5), 8:6 என்ற செட் கணக்கில் மூன்றரை மணி நேரம் போராடி ஆண்ட்ரியாஸ் செப்பியை (இத்தாலி) வீழ்த்தினார்.

செப்பி தனது முந்தைய சுற்றில் அனுபவ வீரர் ரோஜர் பெடரரை அதிர்ச்சி தோல்வியடையச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

# ரொனால்டோ வெளியேற்றம் ரியல் மாட்ரிட் அணி வெற்றி

லா லிகா காற்பந்து தொடரின் கார்டொபா அணிக்கு எதிரான போட்டியில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றுள்ளது.

எதிரணி வீரருடன் மோதலில் ஈடுபட்ட ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார். இருப்பினும் ரியல் மாட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மோதின. இரண்டாவது நிமிடத்தில் கார்டெபா அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை, நபில் கிலாஸ் கோலாக மாற்றினார்.

27ஆவது நிமிடத்தில் கரீம் பென்ஸிமா கோல் அடிக்க, ஆட்டம் 1-1 என சமநிலை அடைந்தது.

போட்டி முடிவதற்கு ஏழு நிமிடங்கள் இருந்த நிலையில், எதிரணி




வீரர் எடிமருடன் மோதலில் ஈடுபட்டதால் ரொனால்டோவுக்கு நடுவர் சிவப்பு அட்டை காண்பித்தார்.

இதன் மூலம் தனது காற்பந்து வாழ்வில் அவர் ஒன்பதாவது முறையாக சிவப்பு அட்டை பெற்றுள்ளார்.

87ஆவது நிமிடத்தில் கேரத் பேல் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றினார், முடிவில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது.

போட்டி முடிந்த பின் ரொனால்டோ தனது சுட்டுரை பக்கத்தில், எடிமர் உடன் கடுமையாக மோதிக் கொண்டதற்காக, அவர் உட்பட ஒவ்வொருவரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என வருத்தம் தெரிவித்திருந்தார். (க)

# யாழ்ப்பாண பல்கலையை வீழ்த்தியது சென்றலைட்ஸ் விளையாட்டு கழகம்

(மானிப்பாய்)

விக்ரம், ராஜன் மற்றும் கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் வருடாந்தம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின், கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 5 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

நேரம் போதாமையால் 29 ஓவர்கள் கொண்ட போட்டியாக இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 29 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் டிட்சன் பொறறிக் 40 ஓட்டங்களையும், என்.சற்குனேஸ்வரன் 33 ஓட்டங்களையும், எம்.தனஞ்செயகுமாரா 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

சென்றலைட்ஸ் அணி சார்பாக, அஜித் டார்வின், கே.கிஷாந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட் டுகளை கைப்பற்றினார்கள்.

163 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய, சென்றலைட்ஸ் அணி, 26 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் ஜான்சன் 46 ஓட்டங்களையும், என்.செலரன் 32 ஓட்டங்களையும் பெற்றதுடன், அஷகன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பல்கலைக்கழகம் சார்பாக எஸ். றொமேஸ் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 30 ஓவர்கள் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்.பல்கலைக்கழக அணி ஆகிய நான்கு அணிகள் பங்குபற்றுகின்றன. (க-23)

# சையது மோடி பட்மின்டன் சாய்னா மீண்டும் சம்பியன்



சையது மோடி கிராண்ட் பிரீ கோல்டு சர்வதேச பட்மின்டன் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் சாய்னா நேவால் சமபியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டார். இறுதிப் போட்டியில் உலக சம்பியன் கரோலினா மரினுடன் (ஸ்பெயின்) நேற்று முன்தினம் மோதிய சாய்னா 19:21, 25:23, 21:16 என்ற செட் கணக்கில் போராடி வென்று அசத்தினார். கடந்த ஆண்டும் அவர் இந்த தொடரில் கோப்பையை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தூதரக அதிகாரி பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு

அமெரிக்கத் தூதரகத்தில் அலுவலக பொறுப்பாளர் ஹென்ரூ மேன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இந்த சந்திப்பு இடம பெற்றுள்ளது. இருவரும் முக்கியமான இரு தரப்பு விடயங்கள் மற்றும் இரு நாடுகளின் உறவுகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதனிடையே இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் சுபைர் எம்.எச். டார் சையத்தும் நேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் போது இரு நாடுகளுக்கு இடையிலான முக்கியமான விவகாரங்கள் மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரு நாட்டு தூதுவர்களின் சந்திப்பின் முடிவில் இராஜாங்க அமைச்சர் நினைவுச் சின்னங்களையும் பரிசளித்துள்ளார். (எ-11)

# தேர்தலில் தோற்றிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைந்திருந்தால், முன்னைய அரசாங்கம் தன்னை கொலைக்கூட செய்திருக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய தனக்கு பலவிதமான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்திருந்தால், தற்போது 6 அடி நில குழியில இருந்து இருப்பேன்.

தேர்தலில் நான் தோல்வியடைந்தால், எனது பிள்ளைகளை கைது செய்து சித்திரவதை செய்யவும் மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றிபெற்று மூன்று வாரங்களின் பின் முதல் முறையாக ஜனாதிபதி தனது சொந்த மாவட்டமான பொலநறுவைக்கு சென்றுள்ளார்.

ஊழல் நிர்வா கத்தை நிறைவுக்கு கொண்டு வந்து சிறந்த நிர்வாகத்தை கொண்டுச் செல்லும் கௌரவம் நாட்டின் சகல மக்களையும் சாரும் என புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியின் ஜனஹிந்தன விழா பொலநறுவையில் இடம் பெற்றது. தோப்பாவெவ மற்றும் ஹிங்குரக்கொடட்லி சேனாநாயக்க மைதானங்களில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகத்தின் சகல அரசியல் தலைவர்களின் கருத்தையும் வெற்றிகொண்ட அரசியல கலாசாரம் ஒன்றை அறிமுகம் செய்ய முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள இடைக்கால வரவு செலவு திட்டத்தின் ஊடாக, இது வரையில் எந்த அரசாங்கமும் நாட்டு மக்களுக்கு வழங்காத பல நிவாரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதுடன், மக்களை துன்பத்தில் இருந்து மீட்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ-11)

# புதிய அரசுடன் இணைய இந்தியா எதிர்பார்ப்பு

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட இந்தியா எதிர்ப்பார்ப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்ஹா தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்திய இல்லத்தில் வைத்து இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளினதும் மக்கள் பயன் பெறும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலும் உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பூகோள ரீதியில் மாத்திரம் அல்லாமல், கலாசார ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உறவு உள்ளது.

அத்துடன் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் அரசியல் தெளிவும் உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நியாயமான முறையில் முன்னெடுக்கப்பட்டமையை சிங்ஹா வரவேற்றுப் பேசினார்.

போருக்கு பின்னர் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் உட்பட்ட, வீடுகள் அமைப்பு திட்டங்களையும் இந்தியா செய்து கொடுத்துள்ளது.

இந்தநிலையில் எதிர்காலத்திலும் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் உறவுகள் தொடரும் என்று சிங்ஹா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)

# இலங்கை தொடர்பான குற்றச்சாட்டை முறியடிக்க பிரதமர் யோசனை!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு யோசனைத் திட்டமொன்றை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் குறித்தும் கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று விதமான உள்ளீடுகளை உள்ளடக்கி இந்த யோசனைத் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. எதிர்வரும் நாட்களில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட உள்ளதாகவும், அரசாங்க அதிகாரிகளுடன் ஆக்க பூர்வமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்த விசாரணைகளுக்கு எவ்வித ஒத்துழைப்பையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இவ்வருட...

நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்படி உறுதிமொழியை மன்னார் ஆயரிடம் வழங்கினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் மகஸின் சிறைச்சாலைக்குச் சென்ற மன்னார் ஆயர் அங்கு 120 தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து உரையாடினார்.

பின்னர் வெலிக்கடைச் சிறைக்குச் சென்று அங்குள்ள 5 பெண் அரசியல் கைதிகளையும் சந்தித்து உரையாடினார். அரசின் 100 நாள் வேலைத் திட்டத்துக்குள் கைதிகள் விடுதலை செய்யப்படுவது சாத்தியமாகாது.

எனினும் இந்த வருட முடிவுக்குள் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால மேற்கொள்வார் என்று மன்னார் ஆயரிடம் தெரிவித்தார் என மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

## சி.சு.கட்சி...

கும் கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என முன்னர் தகவல்கள் வெளியாகியது. இதனால் தங்களின் முன்னைய "கை" சின்னத்தில் தனித்துப் போட்டியிடவும் விரும்பினார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் போட்டியிட விரும்பின. இந்நிலையிலேயே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தொடர்ந்து கூட்டணியில் நீடிக்க சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரத்னவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டிசில்வாவும் சம்மதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# ஆட்சி மாற்றம் வந்தாலும் தமிழர்களை கைவிடோம்

## அமெரிக்கா உறுதி

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தமிழர்களை மேற்குலகம் கைவிடாது என யாழ் வந்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உயர் அதிகாரி மிச்செல் எர்வின், வடக்கு மாகாண அவைத்தலைவரிடம் உறுதியளித்துள்ளார்.

யாழ். கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் தலைமை அலுவலகத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளதாக சிவஞானம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு தொடர்பாக சிவஞானம் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினால் இலங்கை மீதான சர்வதேச மனித உரிமைகள் விசாரணைகளில் தொய்வு நிலை ஏற்படக்கூடாதெனவும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள விசாரணையின் போது மேற்குலகம் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறுபடக் கூடாதெனவும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

மேலும் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ வசமுள்ள பொது மக்களின் காணிகள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ள பொது மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு அக்கறை செலுத்த வேண்டும்.

போரினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள மாகாணம் என்ற வகையில் வடக்கு மாகாண சபையின் புதிய அரசிடம் கோரிக்கையாக முன்வைத்திருக்கின்றோம். இங்கு 18 ஆயிரம் மாற்று திறனாளிகள், 70 ஆயிரத்திற்கும்



மேற்பட்ட விதவைகள், 17 ஆயிரம் ஆதரவற்றவர்களை சாதகமாகப் பரிசீலித்து வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வலி வடக்கில் அபகரிக்கப்பட்டுள்ள 6381 ஏக்கர் காணிகள் ஆகியவற்றை விடுவிப்பதற்கு எந்தவித தடங்கல்களும் காணப்படாததனால் இவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விடுவிக்க முடியும்.

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளரின் மாற்றமானது இந்த அரசின் மாற்றத்துக்கான மாற்றமாகவே தென்படுகின்றது. மேலும் இப் புதிய அரசின் தமிழர்கள் தொடர்பான அணுகுமுறை சிறிதுகாலம் செல்லும்போதுதான் மதிப்பிடக் கூடியதாக அமையும்.

இந்த மாகாணத்திலுள்ள வீதிகள் தொடர்ப்பில் பல விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதாவது பிரதான வீதிகள் தான் புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி என்று காட்டப்படுகிறது. ஆனால் உள்ளூராட்சி வீதிகள் புனரமைக்கப்படவில்லை இதுதான் யதார்த்தம். ஆகவே இந்த நிலை மாற்றப்பட்டு மாகாண சபைக்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரியிருந்தேன்.

இத்தகைய கருத்துக்கள் கோரிக்கைகளின் பின்னராக இதற்குப் பதிலளித்த அமெரிக்க அதிகாரி தெரிவிக்கையில், இலங்கை தொடர்பில் கடந்த கால அமெரிக்க நிலைமைகளில் எந்தவித மாற்றமும் இல்லை. அதாவது இலங்கையில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற மனித உரிமைகள் மீதான சர்வதேச விசாரணைகள் தொடருமென்றும் மிச்செல் எர்வின் மேலும் குறிப்பிட்டுள்ளதாகவும் சிவஞானம் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைகுழி வழக்கு...

குறித்து, ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி நிறைஞ்சன், சில அறிக்கைகளை நீதிமன்றம் எதிர்பார்த்திருந்தது. ஒன்று வைத்திய அதிகாரி வைத்தியர் ரட்ணவின் அறிக்கை.

மற்றையது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பகுப்பாய்வு அறிக்கை. ஆனால் இவற்றைப் பெறுவதற்கான அழைப்பாணைகள் பெறப்படாததால் அறிக்கைகள் மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சார்பாக அவரது பிரதிநிதி சமுகமளித்திருந்தார். அவர் குறித்த புதைகுழிக்கு அண்மையில் கிணறு எதுவும் காணப்படவில்லை என்று அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

எனினும், நாம் கிணறு இருந்தமை தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தோம். இதற்கமைவாக விரிவான அறிக்கைகளை சமர்பிக்க நீதிமன்றம் கோரியுள்ளது என்றார். (எ-11)

## மன்னாரில்...

பட்டிருப்பவர்களை விடுதலை செய்யக் கோரியும், திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பில் துரித விசாரணை நடத்தி, அந்தப் பகுதியில் காணாமல் போயுள்ளவர்களுக்கு நீதி வழங்கக் கோரியும் நேற்று இந்த கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இதற்கான அழைப்பை மன்னார் பிரஜைகள் குழு விடுத்திருந்தது.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்து மன்னார் பேருந்து நிலையத்திற்குப் பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள், தமது வாய்களைக் கறுப்பு துணியினால் கட்டியவாறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தி வீதியோரத்தில் நின்றிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தையடுத்து, நீண்ட நாட்களாகத் தீர்வின்றி தொடரும் காணாமல் போயுள்ளவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக புதிய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாக மன்னார் பிரஜைகள் குழுவின் உபதலைவர் அந்தோனி சகாயம் தெரிவித்தார். (எ-11)

## நிறைவேற்று...

முறைமையின் சகல தேவையற்ற அதிகாரங்களும் முழுமையாக நீக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

தேவையற்ற அதீத அதிகாரங்கள் ஊழல் மோசடிகளை உருவாக்கும் என்பது நிரூபணமாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அரச துறையின் முன்னைய கௌரவத்தை மீள உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் சட்டம் ஒழுங்கு துறையும் பாரிய அளவு பிரச்சினைகளை கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது எதிர்நோக்கியதாகத் தெரிவித்துள்ளார். தேர்தல் முறைமையிலும் மாற்றம் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## திஸ்ஸவுக்கு...

அத்தநாயக்க பகிரங்கப்படுத்தியதாக அவர்மீது குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர், திஸ்ஸ அத்தநாயக்கவினால் காண்பிக்கப்பட்ட ஒப்பந்தம் போலியானது என கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கையெழுத்து மோசடி தொடர்பில் திஸ்ஸ மீது வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய சாத்தியங்கள் சட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## பல ஏக்கர் காணி...

ற்றமே காணப்படுவது போல் இராணுவத்தினர் தோட்டம், மாட்டுப் பண்ணை என அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்ததனை காணமுடிந்தது.

இவற்றை விட திரையரங்கு, விளையாட்டு மைதானம், விருந்தினர் விடுதி என்பனவும் நவீனமயத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

இராணுவத்தினருக்கான சிகை அலங்கரிப்பு நிலையம், பொழுதுபோக்கு வசதிகள் என அனைத்துவிதமான இராணுவத் தேவைகளுக்கு என தனித்தனி இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பலாலி படைத்தலைமையகத்தை சூழவுள்ள பிரதேசம் இராணுவநகரம் போல் அனைத்து விதமான நவீன வசதிகளுடன் காணப்பட்டிருந்தது.

பொது மக்களின் குடிமனைகள் இடிபாடுகளுடன் பற்றைகளால் மூடி காணப்பட்டதோடு இராணுவத்தினரின் கழிவுப் பொருட்களும் ஆங்காங்கே தேங்கிக் காணப்பட்டன.

இங்கு காணப்பட்ட இராஜ இராஜேஸ்வரி ஆலயத்தில் உள்ள சாமி விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டு காணப்பட்டதோடு சாமி வாகனங்களும் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

ஆலயங்கள் பற்றைகளால் மூடப்பட்டு பாழடைந்து காணப்பட்டதோடு பராமரிப்பின்றியும் காணப்பட்டன.

இவற்றை அவதானித்த விஜயகலா தலைமையிலான குழுவினர் ஆலயங்களில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு திரும்பினர். (எ-4)

## 100 கிலோ...

ஸ்மா அதிபராக கடமையாற்றிய போது, இராணுவ புலனாய்வு பிரிவினரிடம் இருந்து தகவல் கிடைத்ததாகவும் ஷாமலி பெரேரா கூறியுள்ளார்.

இது குறித்து நடத்திய விசாரணையின் போது மகிந்த ராஜபக்ஷவின் மனைவியின் பெயரும் அதில் பேசப்பட்டது. இதனையடுத்து தனது கணவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதுடன் தனது மகனும் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் பற்றி எந்த தகவல்களையும் வெளியிடக் கூடாது என தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது எனவும் மீறி தகவல்களை வெளியிட்டால், தனது கணவருக்கு வெளியில் செல்ல இடமளிக்க போவதில்லை என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது எனவும் ஷாமலி பெரேரா தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## உயர் பாதுகாப்பு...

சுவாமிநாதன் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள நிலையிலேயே பிரதி அமைச்சர் விஜயகலா உயர் பாதுகாப்பு வலயத்தை நேற்றைய தினம் சென்று பார்வையிட்டுள்ளார்.

பிரதி அமைச்சருடன் பலாலியினை சொந்த இடமாகக் கொண்டு தற்போது இடம் பெயர்ந்துள்ள மக்களும் தமது பூர்வீக நிலங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

பலாலி படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்ற விஜயகலா தலைமையிலான குழுவினர் பிற்பகல் 06.30 மணியளவில் பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் பலாலி தர்மநகரில் உள்ள திருஞான வைரவர் ஆலயத்திலும் வழிபாடுகளுக்காக சென்ற போதிலும் இராணுவத்தினரால் முட்கம்பி அடித்து பாதுகாப்பு போடப்பட்டிருந்தமையால் வைரவர் ஆலயத்திற்குள் செல்ல முடியாது போய்விட்டது.

கடந்த 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதியன்று குறித்த ஆலயத்திற்கு அமரர் மகேஸ்வரன் சென்றிருந்த பிற்பாடு யாரும் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அதன் பின்னர் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் அவரது மனைவியான விஜயகலா நேற்றைய தினம் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## இன்னும் மூன்றே...

எதிரான வழக்கு நேற்று பத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றதுடன் விசாரணைகள் அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முன்னாள் பிரதியமைச்சர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவருக்கு எதிரான சாட்சியங்கள் உட்பட ஏனைய அறிக்கைகளை பொலிஸார் சரியான முறையில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத காரணத்தால் நீதவான் சந்திம எதிரிமான்ன வழக்கை ஒத்திவைத்தார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முத்து ஹெட்டிகம, தான் செய்யாத தவறுக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதாக கூறினார்.

எவ்வாறாயினும் நீதிமன்றத்தில் நியாயம் நிறைவேற்றப்படும் எனவும் தான் எதற்கும் கவலைப்படும் நபர் அல்ல எனவும் இன்னும் மூன்று மாதங்களில் மகிந்த ராஜபக்ச யுகம் மீண்டும் உருவாக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)




## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய ஆசிரிய நண்பர்
**திரு.க.உருத்திரகுமாரன் (ஜே.பி)**
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீரைக்
காணிக்கையாக்கி அவரின் இழப்பால்
துயருறும் குடும்பத்தினருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா நயினைத் தாயின்
திருவடிகளில் சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**- வலம்புரி நண்பர்கள்**

## மரண அறிவித்தல்

**திருமதி சின்னத்தங்கச்சி தியாகராஜா**
(பூமாதேவி)



சங்கானை ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கச்சி தியாகராஜா அவர்கள் 2015.01.24 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் இராசரத்தினம் சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகளும், சுப்பிரமணியம் தியாகராஜாவின் (பத்திரிகை விற்பனையாளர் சித்தன்கேணி, ஓய்வுபெற்ற இ.போ.ச உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சுசிலாதேவி (கனடா), ரவீந்தினி (திருகோணமலை), லலிதா (ஜேர்மனி), விமலா (லண்டன்), சுமதி (ஜேர்மனி), ஜெயரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசூரியர், பத்மநாதன், தயாநிதி, சிவனருள், சுஜீவாகரன், சுஜதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அமரர் நாகராசா, தியாகராசா (சிறீ-பிரான்ஸ்), இராசகுமார் (அப்பப்பு-கனடா), தனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினவல்லி, ஜெயராஜா (கனடா) அமரர் சர்வகுலராசா, மகேந்திரராஜா, சுந்தர்ராஜா, சிவராஜா (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (2015.01.27) செவ்வாய்க்கிழமை நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கத்தை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர் சுப்பிரமணியம்
தியாகராஜா (சித்தன்கேணி)
தொலைபேசி இல: [illegible]

(சி-9930)

விசேட விலைக்குறைவு
25/01/2015-25/02/2015 வரை
மிகத் துல்லியமான, உயர் தரத்திலான



6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர் பிறின்டிங்
டிஜிற்றல் பனர், டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள், முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
JANA DIGITAL PRINTING
மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
T.P; 021 221 3233
077 0731654
(சி-9924)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.